# கைத்தறி, கைத்திறன்,
# துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

### மானியக் கோரிக்கை எண். 18


**க. பாஸ்கரன்**

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2018

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2018–2019

## பொருளடக்கம்


| வ.எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1–69 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்” | 70–114 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 115–150 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 151–159 |

# பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை



| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சிக் குறிப்பு | 1 |
| 2 | பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி | 5 |
| 3 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 5 |
| 4 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 7 |
| 5 | பட்டுவளர்ச்சித் துறை | 8 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு | 9 |
| 7 | பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் | 11 |
| 8 | தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு | 12 |
| 9 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 16 |
| 10 | கச்சாப்பட்டு உற்பத்தி | 50 |
| 11 | பயிர் காப்பீடு | 51 |
| 12 | 2017–2018–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டத் திட்டங்கள் | 52 |
| 13 | பட்டு சுற்றுலாத் திட்டம், ஏற்காடு | 62 |
| 14 | பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் | 63 |
| 15 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் | 67 |
| 16 | 2018–2019–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 69 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்”

அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 70 |
| 2 | விற்பனை நிலையங்கள் | 71 |
| 3 | கண்காட்சிகள் | 72 |
| 4 | உற்பத்தி நிலையங்கள் | 73 |
| 5 | விற்பனை அளவு | 75 |
| 6 | தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட மாற்றம் | 77 |
| 7 | தகவல் தொழில்நுட்பம் சாரா முயற்சிகள் | 90 |
| 8 | புதிய வருவாய் முறைகள் | 92 |
| 9 | தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியதற்காக பூம்புகார் பெற்ற விருதுகள் | 94 |
| 10 | ஏற்றுமதி | 94 |
| 11 | சிறப்புத் திட்டங்கள் | 95 |
| 12 | கைவினைஞர்களுக்கான நலன் | 96 |
| 13 | நகர்ப்புற கண்காட்சித்திடல் | 101 |
| 14 | கிராப்ட் கபே | 105 |
| 15 | ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 106 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 16 | நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல் | 111 |
| 17 | சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 112 |
| 18 | தலைமை அலுவலகம் புதுப்பித்தல் | 112 |
| 19 | உலக கற்சிற்ப நகரம் | 113 |
| 20 | மாமல்லபுர கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு | 114 |
| 21 | ஆஸ்திரேலிய பயணம் | 114 |
| 22 | தொலைநோக்கு பார்வை | 114 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 115 |
| 1 | வாரியத்தின் நோக்கங்கள் | 116 |
| 2 | நிருவாகம் | 117 |
| 3 | செயல்பாடுகள் | 117 |
| 4 | கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள் | 123 |
| 5 | வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் | 127 |
| 6 | கிராமத் தொழில்கள் | 130 |
| 7 | விற்பனை நிலையங்கள் | 143 |
| 8 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 145 |
| 9 | வாரியத்திற்கு சொந்தமான கட்டடங்களை புனரமைத்தல் | 147 |
| 10 | கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 148 |
| 11 | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 149 |
| | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 151 |

# பட்டுவளர்ச்சித் துறை

ஒப்பற்ற பகட்டுடனும் இயற்கையான பளபளப்புடனும் உலக ஆடைகளுள் மிகவும் நேர்த்தியானதாக பட்டாடை திகழ்கிறது. அது சாயங்களை ஈர்க்கும் தன்மை, அதிக உறிஞ்சும் தன்மை, குறைவான எடை, மென் தன்மை, விரைவில் மீளும் திறன், மிகச் சிறப்பு வாய்ந்த திரைச்சீலைக்குரிய குணம் மற்றும் அதிக நீடித்து உழைக்கும் தன்மை போன்ற சிறந்த பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இத்தகைய தனித்துவம் வாய்ந்த பண்புகளால் பட்டாடை பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களை பெரிதும் கவர்ந்திருக்கிறது. எனவே அது உலகம் முழுவதும் “ஆடைகளின் அரசி” என்று அறியப்படுகிறது.

சேலைகள், வேட்டிகள், ஆடைத் துணிகள், கழுத்து/தோளணித் துண்டுகள், ஆயத்த ஆடைகள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், அறை அலங்கார துணிகள் போன்ற பல்வேறு பட்டுத் துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மற்ற நூல் இழைகளுடன் பட்டினை ஒருங்கிணைத்து பல்வேறு கலப்புத் துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பட்டு முதலில் சீனாவில் கண்டறியப்பட்டு பின்னர் உலகின் மற்ற பகுதிகளுக்கு பரவியது என வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சீனாவின் எழுத்துருப் பதிவுகளின்படி ஏறத்தாழ கி.மு.2640–ஆம் ஆண்டில் பட்டு கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சீன மக்கள் பட்டுத்தொழிலின் இரகசியத்தை 2500 ஆண்டுகளுக்கு மேல் பாதுகாத்து ஏகபோக தனியுரிமை கொண்டு உலகின் மற்ற பகுதிகளுடன் பட்டு வணிகம் செய்து வந்தனர் என்று வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. பட்டுத் தொழில் ஏறத்தாழ கி.மு 140–ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து திபெத் வழியாக இந்தியாவிற்கு பரவியதாக வரலாற்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கனிஷ்கர் காலத்தில் இந்தியாவிற்கும் ரோமானிய/கிரேக்க நாடுகளுக்கும் இடையே மிகவும் செழிப்பான பட்டு வர்த்தகம் நடைபெற்றதாக வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியங்களான கலித்தொகை மற்றும் பரிபாடல் (எட்டுத்தொகை) மற்றும் திருமுருகாற்றுப்படை (பத்துப் பாட்டு) யிலிருந்து தமிழ்நாட்டில் பட்டு ஆடைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

பட்டு நூலினை உற்பத்தி செய்வதற்காக பட்டுப்புழுக்களை வளர்ப்பது பட்டு வளர்ச்சி எனப்படுகிறது. மல்பரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு செய்தல் போன்ற செயல்பாடுகளை பட்டுத் தொழில் உள்ளடக்கி உள்ளது. அதிக வேலை வாய்ப்பினை உருவாக்கக் கூடியதாகவும், குறைந்த மூலதனத்தில் அதிக வருவாயினைப் பெற்றுத் தரவல்லதாகவும் இருப்பதால் பட்டுத்தொழில் இலட்சக் கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழ்கிறது. இத்தொழில் பண்ணை மற்றும் பண்ணை சாராத செயல்பாடுகளுடன் கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும், அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தர வல்லதாக இருப்பதாகவும், இந்தியா போன்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகச் சிறந்த கருவியாக கருதப்படுகிறது. இத்தொழில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஒரு முக்கியமான பங்கு வகிப்பதுடன் வேலை வாய்ப்பைத் தேடி கிராமப்புற மக்கள் நகரங்களுக்கு செல்வதையும் தடுக்கிறது.

பட்டுத் தொழிலானது ஒரு கிலோகிராம் பட்டு நூலினை உற்பத்தி செய்வதன் மூலம் ஆண்டு முழுவதும் 11 மனித நாட்கள் வேலைவாய்ப்பினை (பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள் மூலம்) ஏற்படுத்தித் தருவதாக

கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாற்றல் மிகச் சிறப்பானது என்றும் வேறெந்த தொழிலும் இது போன்று அதிக அளவு வேலை வாய்ப்பினை குறிப்பாக கிராமப்புறங்களில் ஏற்படுத்துவதில்லை எனவும் கருதப்படுகிறது. மேலும் இத்தொழில் ஏற்படுத்தும் வேலைவாய்ப்புகளில் ஏறத்தாழ **55** சதவீதம் மகளிரால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இது மகளிருக்கு ஏற்ற தொழிலாகும். எனவே பட்டுத் தொழில் கிராமப்புற மறுசீரமைப்பிற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

பட்டுத்தொழில் குறைந்த காலத்தில் குறைந்த மூலதனத்தில் அதிக வருவாய் ஈட்டித் தரக்கூடிய, ஆண்டு முழுவதும் மேற்கொள்ளக்கூடிய மிகச் சிறந்த வாழ்வாதாரம் அளிக்கக்கூடிய தொழில்களுள் ஒன்றாகும். விவசாயிகள் **25–27** நாட்களில் ஒரு பட்டுப்புழு வளர்ப்பினை மேற்கொண்டு, அதன் விளைபொருட்களான பட்டுக்கூடுகளை விற்பனை செய்வதன் மூலம் வருவாய் பெற இயலும் என்பதால் இத்தொழில் விவசாயிகள் மாதந்தோறும் வருவாய் பெறுவதை உறுதி செய்கிறது. உற்பத்தி செய்யப்படும் பட்டு ஜவுளிகளின் மொத்த மதிப்பில் ஏறத்தாழ **60** சதவீதம் தொடக்க நிலை உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு திரும்ப கிடைக்கிறது.

## 2. பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி




## 3. இந்தியாவில் பட்டுத் தொழில்

உலக நாடுகளில் இந்தியாவில் மட்டுமே மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா ஆகிய நான்கு வகை பட்டுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. **2017–2018**ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட **31,931** மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில் மல்பெரி பட்டு **69.09** சதவீதமும் **(22,062** மெட்ரிக் டன்**)** டசார் பட்டு **9.4** சதவீதமும் **(3,018** மெட்ரிக் டன்**)**, ஈரி பட்டு **20.8** சதவீதமும் **(6,661** மெட்ரிக் டன்**)** மற்றும் மூகா பட்டு

0.59 சதவீதமும் (190 மெட்ரிக் டன்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் ஜார்க்கண்டு ஆகிய ஐந்து மாநிலங்களில் மல்பெரி பட்டுத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது. மல்பெரி பட்டு, ஒக் டசார் பட்டு, மூகா பட்டு மற்றும் ஈரி பட்டு ஆகிய நான்கு வகைப் பட்டுகளையும் உற்பத்தி செய்யக்கூடிய தனித்துவத்தை இந்தியாவின் வடகிழக்கு பகுதி பெற்றுள்ளது. மொத்தப் பட்டு உற்பத்தியில் இந்தியாவின் வடகிழக்கு பகுதி 18 சதவீத பங்களிப்பினை அளிக்கிறது.

சீனாவிற்கு அடுத்தபடியாக அதிக அளவில் மல்பெரி கச்சாப் பட்டினை உற்பத்தி செய்யும் இரண்டாவது நாடாக இந்தியா இருப்பதுடன் உலக அளவில் பட்டுத் துணிகளை அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடாகத் திகழ்கிறது. இருப்பினும் கச்சாப் பட்டுத் தேவைக்கும் கச்சாப் பட்டு உற்பத்திக்கும் இடையே இடைவெளி இருப்பதால் கச்சாப்பட்டு தேவையினை பூர்த்தி செய்ய குறிப்பிடத்தக்க அளவு கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போதைய நிலையில் இந்தியாவின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப்பட்டுத் தேவை 35,000 மெட்ரிக் டன் ஆகும். இதில் 31,931 மெட்ரிக் டன் மட்டுமே நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள கச்சாப்பட்டுத் தேவையினை பூர்த்தி செய்ய சீனாவிலிருந்து கச்சாப்பட்டு

இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியா ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.1,150 கோடி மதிப்பிற்கு கச்சாப்பட்டினை இறக்குமதி செய்கிறது (2017–2018).

இந்தியா, ஆண்டொன்றிற்கு ரூ.1,280 கோடி மதிப்பிலான பட்டு ஜவுளிகளை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது (2017–2018).

**4. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்**

தமிழ்நாடு வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் காஞ்சிபுரம் பட்டு சேலைகள் உள்ளிட்ட கைத்தறி பட்டு சேலைகள் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. சேலத்தில் தயாரிக்கப்படும் தனித்தன்மை வாய்ந்த வெண்பட்டு வேட்டி புவிசார் குறியீடு எண் பெற்றுள்ளது. மாநிலத்தின் 3000 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு தேவைக்கெதிராக 1984 மெட்ரிக் டன் அளவு மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதால் கச்சாப் பட்டுக்கான தேவை நிலையாக உள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகாவிலிருந்து ஓரளவு பட்டு நூல் கொள்முதல் செய்யப்படுவதுடன் சீன நாட்டிலிருந்தும் பட்டு நூல் இறக்குமதி செய்யப்படுகிறது.

**5. பட்டு வளர்ச்சித்துறை**

பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், தமிழ்நாட்டை வெண்பட்டு மாநிலமாக உருவாக்குதல், தற்போதைய புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரது பொருளாதார நிலை முன்னேற உதவுதல், கிராமப்புற, சிறுநகர பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன பட்டுவளர்ச்சித் துறையின் முக்கியக் குறிக்கோள்களாகும். தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை பட்டுவளர்ச்சித் துறை இயக்ககம் தயாரித்து செயல்படுத்தி வருகிறது.

பட்டுவளர்ச்சித் துறைக்கென ஒரு தனித்துறை 1979–ஆம் ஆண்டில் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.


மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களது ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்படி கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பட்டுவளர்ச்சித் துறை இயங்கி வருகிறது.

## 6. பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு

சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட விரிவாக்க அமைப்புக்கான தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் அடங்கிய கீழ்க்காணும் பணியிடங்களை பட்டுவளர்ச்சித் துறைக்கு தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது:

| வ.எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் | 10 |
| 4 | உதவி இயக்குநர் | 27 |
| 5 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 6 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 7 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 837 |
| 8 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 328 |
| | மொத்தம் | 1,453 |

பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை, பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ள போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் கீழ்க்கண்டவாறு இத்துறையில் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன:




பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்

## 7. பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்

பட்டுவளர்ச்சித் துறையானது தமிழ்நாட்டில் பட்டு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தக் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது:

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை அனைவரும் அறியச் செய்து விரிவாக்கம் செய்தல்.
- மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டுநூற்பு குறித்து பயிற்சி அளித்தல்
- உயர்விளைச்சல் மல்பெரி இரக சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், தனிபுழுவளர்ப்பு குடில் அமைத்தல், இளம்புழு வளர்ப்பு மையம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானிய உதவியளித்தல்.
- தரமான நோயற்ற பட்டு முட்டைகள் வழங்கல்.
- தொழில் நுட்ப பரிமாற்றத்தின் மூலம் பட்டுக்கூடு உற்பத்தி திறனை அதிகரித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டுக்கூடு மற்றும் பட்டு நூலுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் மேம்பட்ட பட்டு நூற்பு / பட்டு முறுக்கேற்றும் அலகுகள் அமைக்க மானிய உதவியளித்தல்.




**பட்டு வளர்ச்சித்துறை அலகுகள் அமைவிட மாநில வரைபடம்**

## 8. தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு

தமிழ்நாட்டில் **46,570** ஏக்கர் பரப்பில் **24,427** விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டு வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு ஏக்கர் பரப்பில் வீரிய இரக மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10,500/–, பட்டு வளர்ச்சித்துறை வழங்குகிறது. அதிகபட்சமாக 5.00 ஏக்கர் பரப்பில் மல்பெரி நடவு செய்ய ரூ.52,500/– ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மல்பெரி நடவு செய்வதிலிருந்து, பட்டுக் கூடுகளை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து நிலையிலும் விரிவாக்கப் பணியாளர்கள் எல்லா வகையான உதவிகளையும் விவசாயிகளுக்கு அளித்து வருகின்றனர்.

உயர் விளைச்சல் தரும் வி1, எஸ் வரிசை, எம்.ஆர்.2 ஆகிய மல்பெரி இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. மல்பெரி செடிகள் செழிப்பாக வளரச் செய்வதற்காக இணை வரிசை நடவுமுறை விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்காக மல்பெரி தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. இரசாயன

உரங்களுடன் மல்பெரி தோட்டத்திற்கு உயிர் உரங்களும் பரிந்துரை செய்யப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்பில் வேலையாட்கள் பயன்பாட்டினை குறைப்பதற்காக தற்போது தண்டு அறுவடை முறை பின்பற்றப்படுவதால் மல்பெரி தோட்டம் ஒவ்வொரு புழுவளர்ப்புக்குப் பின்னரும் கவாத்து செய்யப்படுகிறது. ஒவ்வொரு கவாத்துக்கு பின்னரும் இடைநிலை சீர்திருத்தங்களும் உரமிடுவதும் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் மல்பெரி வறட்சி நிலவும் காலங்களில் கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்திடவல்லது என்பதால் மாநிலத்தில் பல்வேறு மாவட்ட நிர்வாகங்களும் விவசாயிகள் மல்பெரி மரங்களை நடவு செய்ய ஊக்கப்படுத்துகின்றன. தோட்டங்களில் வேலிகளிலும், வரப்பிலும், நடைபாதை ஓரங்களிலும் மல்பெரி மரங்களை பட்டு வளர்ப்பில் ஈடுபடாத விவசாயிகளும் நடவு செய்வதை ஊக்கப்படுத்தி வருகிறது.

**மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு**

| மாவட்டம் | 31.03.2018ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| கிருஷ்ணகிரி | 7922.15 | 0 | 7922.15 | 4716 |
| தருமபுரி | 3660.85 | 0 | 3660.85 | 2437 |
| சேலம் | 2741.70 | 0 | 2741.70 | 1733 |

| மாவட்டம் | 31.03.2018ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| ஈரோடு | 4503.31 | 0 | 4503.31 | 2073 |
| கோயம்புத்தூர் | 2787.75 | 0 | 2787.75 | 1152 |
| திருப்பூர் | 5282.14 | 0 | 5282.14 | 2526 |
| நீலகிரி | 65.00 | 0 | 65.00 | 60 |
| வேலூர் | 2929.25 | 169.85 | 3099.10 | 1716 |
| காஞ்சிபுரம் | 35.50 | 0 | 35.50 | 15 |
| திருவள்ளூர் | 32.00 | 0 | 32.00 | 15 |
| திருவண்ணாமலை | 987.95 | 165.00 | 1152.95 | 708 |
| நாமக்கல் | 1925.75 | 72.00 | 1997.75 | 1083 |
| கரூர் | 364.00 | 0 | 364.00 | 191 |
| திருச்சி | 1013.30 | 0 | 1013.30 | 528 |
| பெரம்பலூர் | 133.50 | 0 | 133.50 | 66 |
| அரியலூர் | 133.00 | 0 | 133.00 | 66 |
| புதுக்கோட்டை | 613.00 | 0 | 613.00 | 311 |
| திருவாரூர் | 167.00 | 0 | 167.00 | 86 |
| தஞ்சாவூர் | 338.00 | 0 | 338.00 | 179 |
| நாகப்பட்டினம் | 85.00 | 0 | 85.00 | 42 |
| விழுப்புரம் | 1003.25 | 0 | 1003.25 | 540 |
| கடலூர் | 384.25 | 0 | 384.25 | 167 |
| மதுரை | 434.00 | 0 | 434.00 | 187 |
| தேனி | 1887.50 | 0 | 1887.50 | 849 |
| விருதுநகர் | 524.00 | 0 | 524.00 | 230 |
| இராமநாதபுரம் | 194.50 | 0 | 194.50 | 97 |
| சிவகங்கை | 330.40 | 0 | 330.40 | 155 |
| திண்டுக்கல் | 3510.75 | 0 | 3510.75 | 1539 |
| திருநெல்வேலி | 1724.25 | 0 | 1724.25 | 732 |
| தூத்துக்குடி | 224.85 | 0 | 224.85 | 102 |
| கன்னியாகுமரி | 225.50 | 0 | 225.50 | 126 |
| **மொத்தம்** | **46163.40** | **406.85** | **46570.25** | **24427** |

**2018–2019**–ஆம் ஆண்டில் கூடுதலாக **10,000** ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



**மல்பெரித் தோட்டம்**

கடந்த மூன்றாண்டுகளின் தொடக்கத்தில் இருந்த மல்பெரி சாகுபடி விவரம் பின்வருமாறு :

| ஆண்டு | மல்பெரி பரப்பு (ஏக்கரில்) |
|---|---|
| 2015-2016 | 41,440 |
| 2016-2017 | 40,400 |
| 2017-2018 | 43,935 |

## 9. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

ஈரோடு, தருமபுரி, வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து மண்டல அலுவலகங்கள் மூலமாக மல்பெரி விரிவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் மாநிலத்தில் உள்ள 19 உதவி இயக்குநர்களால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

பட்டுவிதை ஒருங்கிணைப்புப் பணியினை, ஒசூரிலுள்ள துணை இயக்குநர் அலுவலகம், 5 உதவி இயக்குநர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்கிறது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டினை வர்த்தகம் செய்யும் பணியை, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றக அலுவலகம் மேற்கொள்கிறது. மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று, துணை இயக்குநர் தலைமையில் ஒசூரில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம், பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சியினை வழங்கி வருகிறது.

மாநிலத்தில் பட்டுத்தொழிலின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் கீழ்க்காணும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:

## 9.1 ஆதார பட்டுப்புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டுவளர்ச்சித் துறையில் உள்ள ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைக்கூடுகள் வர்த்தகரீதியிலான முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்காக பட்டு விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.



**பி2 விதைப்பண்ணை, மசினகுடி**

மூன்றடுக்கு முறையில் பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரித்து பட்டுப்புழு முட்டைகளை உற்பத்தி செய்ய கீழ்க்காணும் 19 விதைப் பண்ணைகள் இத்துறையில் உள்ளன:

## விதைப் பண்ணைகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.38 |
| | | 3 | ஓசூர் | பி2 | 44.72 |
| | கல்கொண்டப்பள்ளி | 4 | கல்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | | 5 | தளி | பி3 | 3.50 |
| | உத்தனப்பள்ளி | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | | 8 | மேலகிரி | பி2 | 10.20 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 |
| சேலம் | சேலம் | 10 | ஏற்காடு | பி2 | 5.96 |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 9.00 |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| வேலூர் | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 25.25 |
| | | 18 | மசினகுடி | பி2 | 8.35 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 |
| | | | **மொத்தம்** | | **1907.58** |

கடந்த மூன்றாண்டுகளில் இந்த விதைப் பண்ணைகளின் சாதனை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | விதைப் பண்ணையின் பெயர் | 2015-2016 | | 2016-2017 | | 2017-2018 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
| 1 | பேரிகை | 0.363 | 0.221 | 0.556 | 0.436 | 0.186 | 0.160 |
| 2 | ஆவலப்பள்ளி | 0.985 | 0.566 | 0.833 | 0.418 | 1.150 | 1.116 |
| 3 | ஓசூர் | 2.170 | 1.341 | 1.683 | 0.176 | 1.583 | 1.161 |
| 4 | கல்கொண்டப் பள்ளி | 2.219 | 0.804 | 0.812 | 0.321 | 1.472 | 0.662 |
| 5 | தளி | 1.824 | 0.689 | 0.790 | 0.281 | 1.118 | 0.483 |
| 6 | உத்தனப்பள்ளி | 6.481 | 3.196 | 6.419 | 2.595 | 6.873 | 0.426 |

| வ. எண். | விதைப் பண்ணையின் பெயர் | 2015-2016 | | 2016-2017 | | 2017-2018 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) | பட்டுக் கூடு உற்பத்தி (எண்ணிக்-கை இலட்சத்தில்) | மதிப்பு (ரூ. இலட் சத்தில்) |
| 7 | உளிமங்கலம் | 2.297 | 0.860 | 1.894 | 0.803 | 2.369 | 0.693 |
| 8 | மேலகிரி | 3.746 | 1.182 | 2.871 | 0.825 | 3.347 | 0.893 |
| 9 | கோலட்டி | 21.471 | 7.219 | 21.400 | 7.850 | 20.298 | 7.048 |
| 10 | ஏற்காடு | 0.595 | 0.296 | - | - | - | - |
| 11 | ஆசனூர் | - | - | - | - | - | - |
| 12 | மாதஹள்ளி | 2.803 | 2.239 | 7.131 | 3.792 | 2.917 | 4.099 |
| 13 | அத்தனாவூர் | 1.152 | 0.744 | 1.201 | 0.914 | 1.265 | 0.566 |
| 14 | கொல்லி மலை | 1.809 | 1.120 | 1.620 | 1.054 | 1.108 | 0.900 |
| 15 | மயிலாடும் பாறை | 5.014 | 1.345 | 3.287 | 0.985 | 1.339 | 0.513 |
| 16 | செங்கோட்டை | 9.241 | 3.009 | 5.189 | 1.817 | 4.940 | 1.962 |
| 17 | குன்னூர் | 0.980 | 0.738 | 1.032 | 0.626 | 0.700 | 0.607 |
| 18 | மசினகுடி | 2.025 | 1.415 | 3.130 | 2.647 | 2.517 | 2.096 |
| 19 | மசக்கல் | 2.717 | 2.190 | 2.287 | 2.106 | 0.250 | 1.771 |
| | **மொத்தம்** | **67.890** | **29.174** | **62.136** | **27.645** | **53.432** | **25.155** |

## 9.2 வித்தகங்கள்

பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கு வித்தகங்கள் ஒரு முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. தமிழ்நாட்டில் அமைந்துள்ள 11 வித்தகங்கள் மற்றும் மூன்று மத்திய பட்டு வாரிய வித்தகங்களில் நோயற்ற பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

## வித்தகங்கள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / மத்திய பட்டு வாரியம்* | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஓசூர் (வித்தகம்) | 1 | ஓசூர் (கலப்பினம்) | மாநில அரசு | 4.00 |
| | | | ஓசூர் (இருசுழற்சி) | மாநில அரசு | 10.50 |
| | | * | ஓசூர் | மத்திய பட்டு வாரியம் | 14.00 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி | மாநில அரசு | 16.00 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | மாநில அரசு | 3.00 |
| | | * | தருமபுரி | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் | மாநில அரசு | 3.00 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | மாநில அரசு | 8.00 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு | மாநில அரசு | 8.00 |
| | தாளவாடி | 7 | தாளவாடி | மாநில அரசு | 4.00 |
| வேலூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி | மாநில அரசு | 3.00 |
| | | * | திருப்பத்தூர் | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி | மாநில அரசு | 4.00 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | மாநில அரசு | 3.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 11 | குற்றாலம் | மாநில அரசு | 4.00 |
| | | | **மொத்தம்** | | **100.50** |

கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசு வித்தகங்களின் சாதனை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | வித்தகத்தின் பெயர் | 2015-2016 | | 2016-2017 | | 2017-2018 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
| 1 | ஓசூர் (கலப்பினம்) | 2.67 | 10.18 | 3.02 | 12.06 | 4.12 | 16.38 |
| | ஓசூர் (இருசுழற்சி) | 6.44 | 35.42 | 3.42 | 18.83 | 3.15 | 17.34 |
| * | ஓசூர் (மத்திய பட்டு வாரியம்)) | 22.35 | 145.25 | 23.06 | 161.43 | 26.35 | 184.47 |

| வ. எண். | வித்தகத்தின் பெயர் | 2015-2016 | | 2016-2017 | | 2017-2018 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பட்டு முட்டை உற்பத்தி (இலட்சம் எண்ணிக்கை) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
| 2 | கிருஷ்ணகிரி | 18.54 | 101.99 | 18.04 | 99.24 | 14.03 | 77.18 |
| 3 | சோகத்தூர் | 2.42 | 13.30 | 1.14 | 6.28 | 0.94 | 5.19 |
| * | தருமபுரி (மத்திய பட்டு வாரியம்) | 10.11 | 61.60 | 11.08 | 74.60 | 11.07 | 77.49 |
| 4 | பென்னாகரம் | - | - | 1.16 | 6.39 | 0.91 | 5.02 |
| 5 | கோயம்புத்தூர் | 6.07 | 33.39 | 5.33 | 29.33 | 2.58 | 14.19 |
| 6 | ஈரோடு | 6.34 | 34.89 | 6.13 | 33.71 | 3.63 | 19.94 |
| 7 | தாளவாடி | 3.55 | 19.53 | 2.65 | 14.58 | 1.78 | 9.80 |
| 8 | வாணியம்பாடி | 3.82 | 20.98 | 4.35 | 23.93 | 2.98 | 16.41 |
| * | திருப்பத்தூர் (மத்திய பட்டு வாரியம்) | 5.21 | 23.33 | 4.61 | 21.51 | 6.07 | 41.26 |
| 9 | திருச்சி | 3.31 | 12.63 | 3.32 | 13.22 | 2.45 | 9.81 |
| 10 | திண்டுக்கல் | - | - | - | - | - | - |
| 11 | குற்றாலம் | 2.51 | 9.64 | 2.12 | 8.46 | 2.12 | 8.73 |
| | **மொத்தம்** | **93.34** | **522.13** | **89.43** | **523.57** | **82.18** | **503.21** |



**பட்டுப்பூச்சி முட்டை இடுதல்**

## 9.3 பல்நிலை குளிர்பதன அலகுகள்

பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சிக்கு ஆகும் கால அடிப்படையில் ஓர் ஆண்டில் ஒரு தலைமுறை, இரண்டு தலைமுறை மற்றும் பல தலைமுறைகளை உருவாக்கும் பட்டுப்புழுக்கள் முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக, பல சுழற்சி இனங்களில் பட்டு முட்டைகள் முட்டையிட்ட 10-11 நாட்களிலும், இரு சுழற்சி இனங்கள் மற்றும் ஒரு சுழற்சி இனங்களில் 6-10 மாதங்களிலும் பொரிக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு விவசாயிகளால் வெண்பட்டு முட்டை வளர்ப்பு அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இருசுழற்சி பட்டுப்புழு இனம் ஓர் ஆண்டில் இரு தலைமுறைகளை உருவாக்குகிறது. பட்டு முட்டைகளின் விதை உறக்கத்தினைப் போக்கி அவற்றை நான்கு, ஆறு மற்றும் ஒன்பது மாதங்களுக்குப் பின் பொரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக இருசுழற்சி பட்டு முட்டைகள் 2.5$^{o}$C முதல் 25$^{o}$C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் 120 முதல் 300 நாட்கள் என முன்னதாக நிர்ணயம் செய்யப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதன அலகில் பதனம் செய்யப்படுகின்றன. விவசாயிகள்

வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை பெற, பட்டு முட்டைகளைப் பதனப்படுத்திட அதிக பட்ச கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இருசுழற்சியின பட்டு முட்டைகளை ஆண்டு முழுவதும் பதனப்படுத்தி விநியோகம் செய்வதற்காக 40 இலட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்டு இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும் ஓசூரிலும் செயல்படுகின்றன. 2017-2018–ஆம் ஆண்டில் இவ்விரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகளில் 29.44 இலட்சம் இருசுழற்சி இன பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் 90 சதவிதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இருசுழற்சியின பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம், தருமபுரி மற்றும் வாணியம்பாடி ஆகிய பட்டு முட்டை வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சி வீரிய பட்டு முட்டைகள் பல்நிலை குளிர்பதன நிலையங்களில் நான்கு, ஆறு, ஒன்பது மாத பதன அட்டவணைப்படி மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பதனப்படுத்தப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.



**பல்நிலை குளிர்பதன அலகு, கிருஷ்ணகிரி**

கடந்த மூன்றாண்டுகளில் இந்த இரு பல்நிலை குளிர்பதன அலகுகளின் சாதனை விவரம் பின்வருமாறு :

| வ. எண். | குளிர்பதன நிலையம் | 2015–2016 | | 2016–2017 | | 2017–2018 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பதனம் செய்யப்பட்ட பட்டு முட்டை தொகுதிகள் (இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | ஈட்டிய வருவாய் (ரூ. இலட் சத்தில்) | பதனம் செய்யப்பட்ட பட்டு முட்டை தொகுதிகள் (இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | ஈட்டிய வருவாய் (ரூ. இலட் சத்தில்) | பதனம் செய்யப்பட்ட பட்டு முட்டை தொகுதிகள் (இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | ஈட்டிய வருவாய் (ரூ. இலட் சத்தில்) |
| 1 | ஓசூர் | 25.56 | 9.80 | 17.39 | 7.28 | 11.90 | 3.40 |
| 2 | கிருஷ்ணகிரி | 25.39 | 9.06 | 25.06 | 10.30 | 17.54 | 4.21 |
| | **மொத்தம்** | **50.95** | **18.86** | **42.45** | **17.58** | **29.44** | **7.61** |

## 9.4 தொழில்நுட்ப சேவை மையங்கள்

மாநிலத்தில் இயங்கிவரும் **105** தொழில் நுட்ப சேவை மையங்கள் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப் புழுவளர்ப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையத்திலும் ஒரு உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர் தலைமையில் **5-6** இளநிலை ஆய்வாளர்கள் பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

**தொழில் நுட்ப சேவை மையங்கள்**

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஒசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர் திருப்பூர் ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர், காஞ்சிபுரம் திருவள்ளூர் | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம், கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டினம் | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல், கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி, மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | **மொத்தம்** | **105** |



**தொழில்நுட்ப சேவை மையம், கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம்**

## 9.5 அரசு பட்டுப் பண்ணைகள்

32 அரசு பட்டுப் பண்ணைகள் பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இவை செயல்முறை மற்றும் பயிற்சி மையங்களாக செயல்பட்டு வருவதுடன் தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம்புழுக்களை தேவைப்படும் பட்டு விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன.



**அரசு பி2 பட்டுப் பண்ணை, உளிமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம்**

## அரசு பட்டுப் பண்ணைகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப் பண்ணை | 3.72 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சித்தேரி | கலப்பின பட்டுப் பண்ணை | 5.79 |
| | | 4 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 |
| | பென்னாகரம் | 5 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.81 |
| சேலம் | சேலம் | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | 14.50 |
| | | 7 | மணியார்–குண்டம் | கலப்பின பட்டுப் பண்ணை | 50.00 |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப் பண்ணை | 6.04 |
| விழுப்புரம் | சேலம் | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 6.56 |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.01 |
| | | 11 | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 3.58 |
| | | 12 | கீர்மாளம் | கலப்பின பட்டுப் பண்ணை | 32.82 |
| திருப்பூர் | உடுமலைப்–பேட்டை | 13 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.10 |
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 14 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | 8.05 |
| வேலூர் | வாணியம்பாடி | 15 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.70 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| திருவண்ணாமலை | திருவண்ணா–மலை | 16 | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.88 |
| வேலூர் | | 17 | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 7.99 |
| கடலூர் | விழுப்புரம் | 18 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.00 |
| திருச்சி | திருச்சி | 19 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.60 |
| | | 20 | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 5.00 |
| | | 21 | கருக்கமடை | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 2.11 |
| | | 22 | பச்சைமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 8.45 |
| | | 23 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.00 |
| தஞ்சாவூர் | | 24 | நாஞ்சிக்–கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | 4.65 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 25 | சி.கே.புதூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 4.93 |
| சிவகங்கை | | 26 | குன்றக்குடி | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 6.20 |
| | | 27 | ஓ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 |
| இராமநாதபுரம் | தேனி | 28 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 |
| திருநெல்வேலி | தென்காசி | 29 | திருநெல்வேலி (இ) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| விருதுநகர் | | 30 | திருவில்லி–புத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 |
| | | 31 | செவலூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 12.00 |
| கன்னியா குமரி | | 32 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 |
| | | | **மொத்தம்** | | **313.00** |

கடந்த மூன்றாண்டுகளில் விவசாயிகள் பயிற்சி மையங்கள், செயல்விளக்க பயிற்சி மையங்கள், மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை ஆகியவைகளில் பட்டு வளர்ப்பில் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கிய விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2015-2016 | 6060 |
| 2016-2017 | 6178 |
| 2017-2018 | 6764 |

கடந்த மூன்றாண்டுகளில் அரசு பட்டுப் பண்ணைகளில் வர்த்தக ரீதியான பட்டுக்கூடுகள் உற்பத்தி குறித்த சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | பட்டுக் கூடு உற்பத்தி (கிலோ) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2015-2016 | 1283.200 | 2.19 |
| 2016-2017 | 1703.700 | 4.09 |
| 2017-2018 | 1652.100 | 4.68 |

கடந்த மூன்றாண்டுகளில் அரசு பட்டுப் பண்ணைகளில் மல்பெரி நாற்றுகள் உற்பத்தி குறித்த சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | மல்பெரி நாற்று உற்பத்தி | |
|---|---|---|
| | உற்பத்தி (எண்ணிக்கை) | வருவாய் (ரூ. இலட்சத்தில்) |
| 2015-2016 | 2385300 | 23.85 |
| 2016-2017 | 2553700 | 25.54 |
| 2017-2018 | 3113900 | 31.14 |

கடந்த மூன்றாண்டுகளில் அரசு பட்டுப் பண்ணைகளில் இளம்புழு வளர்ப்பு குறித்த சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | முட்டைத் தொகுதிகள் வளர்ப்பு | மதிப்பு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2015-2016 | 132262 | 3.97 |
| 2016-2017 | 150045 | 4.50 |
| 2017-2018 | 134390 | 4.03 |

## 9.6 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்து இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, இளம்புழுவளர்ப்பு என்றழைக்கப்படுகிறது. சுகாதாரம் பேணுவதிலும், தேவையான சீதோஷ்ண நிலைகளைப் பராமரிப்பதிலும் மற்றும் தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழுவளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. பிரத்யேக உர பரிந்துரை மற்றும் கவாத்து அட்டவணை அடிப்படையில் தனியான இளம்புழுவளர்ப்பு, மல்பெரித் தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு, புழுவளர்ப்பு காலத்தில் இளம்புழுவளர்ப்பு மையங்களில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது. மாநிலத்தில் வெற்றிகரமான இருசுழற்சி பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழுவளர்ப்புக் கொள்கை திகழ்கிறது. 2017–2018 ஆம் ஆண்டில் 79 சதவீத பட்டு முட்டைகள் இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இளம்புழுவளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதன் மூலம், பட்டு விவசாயிகளது பண்ணையில் புழுவளர்ப்பு காலம் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்கிறது. மேலும், பண்ணை அளவில் பட்டுப்புழு வளர்ப்பிற்கான நாட்கள் ஒவ்வொரு

புழுவளர்ப்பிலும் குறைவதால் விவசாயிகள் அவர்களுடைய பண்ணைகளில் அதிக புழுவளர்ப்புகள் மேற்கொள்ள இயலும்.



**இளம்புழு வளர்ப்பு மையம், உடுமலைப்பேட்டை**

19 அரசு பட்டுப் பண்ணைகளுடன் பிரத்யேகமாக செயல்பட்டு வரும் நான்கு அரசு பட்டுப் பண்ணைகளும் தேவைப்படும் பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம்புழுக்களை விநியோகம் செய்து வருகின்றன.

இவை மட்டுமல்லாது 134 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆண்டொன்றிற்கு 81.00 இலட்சம் பட்டு முட்டைகளை இளம்புழு வளர்ப்பு செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | ஆண்டு | தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் (எண்ணிக்கை) | உற்பத்தி திறன் (இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | இளம்புழுக்கள் வளர்ப்பு (இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | ஈட்டப்பட்ட இலாபம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2015-2016 | 127 | 64.98 | 68.07 | 1157.19 | 391.40 |
| 2 | 2016-2017 | 132 | 72.36 | 60.06 | 1081.08 | 375.38 |
| 3 | 2017-2018 | 134 | 77.58 | 58.16 | 1046.88 | 363.50 |

100 பட்டு முட்டை தொகுதிகளின் விலை ரூ.550/–
100 முட்டை தொகுதிகள் வளர்ப்பதற்கு சேவை கட்டணம்;
ரூ.1150/- (2015–2016), ரூ.1250/- (2016–2017, 2017–2018)

## 9.7 பட்டுக்கூடு அங்காடிகள்

விவசாயிகள் தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுக்கூடுகளை வர்த்தகம் செய்ய ஏதுவாக துறையின் சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 20 பட்டுக்கூடு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டுக்கூடு வாங்குவோர் (நூற்பாளர்கள்), பட்டுக்கூடு விற்போர் (விவசாயிகள்) அடங்கிய ஒரு குழு பட்டுக்கூடுகளுக்கான நியாய விலையினை தினசரி அடிப்படையில் நிர்ணயம் செய்வதில் உதவுகிறது. வெளிப்படையான ஏல நடவடிக்கைகளில் பட்டு நூற்பாளர்கள்

பட்டுக்கூடு ஏலத்தில் பங்கேற்று பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்ய அங்காடிப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

விதைக்கூடு வளர்ப்போரிடமிருந்து விதைக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு வர்த்தகரீதியிலான பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்திட வித்தகங்களுக்கு வழங்கப்படுகின்றன. விதைக்கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.



**அரசு பட்டுக்கூடு அங்காடி, கோயம்புத்தூர்**

## அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | விதை |
| | ஓசூர் | 2 | ஓசூர் | நூற்பு |
| | தேன்கனிக்–கோட்டை | 3 | தேன்கனிக்–கோட்டை | விதை |
| | கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி | நூற்பு |
| தருமபுரி | பென்னாகரம் | 5 | பென்னாகரம் பாலக்கோடு | நூற்பு |
| | தருமபுரி | 6 | தருமபுரி | நூற்பு |
| சேலம் | சேலம் | 7 | சேலம் | நூற்பு |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 8 | கோயம்புத்தூர் | விதை |
| | | 9 | கோயம்புத்தூர் | நூற்பு |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | நூற்பு |
| | ஈரோடு | 11 | ஈரோடு | நூற்பு |
| திருப்பூர் | உடுமலைப்–பேட்டை | 12 | உடுமலைப்–பேட்டை | நூற்பு |
| வேலூர் | வாணியம்பாடி | 13 | வாணியம்பாடி | நூற்பு |
| திருவண்ணா–மலை | திருவண்ணா–மலை | 14 | திருவண்ணா–மலை | நூற்பு |
| திருச்சி | திருச்சி | 15 | திருச்சி | நூற்பு |
| புதுக்கோட்டை | | 16 | புதுக்கோட்டை | நூற்பு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 17 | திண்டுக்கல் | நூற்பு |
| | | 18 | பழனி(இ) சி.கே.புதூர் | நூற்பு |
| சிவகங்கை | | 19 | சிவகங்கை | நூற்பு |
| தேனி | தேனி | 20 | தேனி | நூற்பு |
| திருநெல்வேலி | தென்காசி | 21 | நன்னகரம் | நூற்பு |
| விருதுநகர் | | 22 | திருவில்லிபுத்தூர் | நூற்பு |
| கன்னியாகுமரி | | 23 | நாகர்கோவில் | நூற்பு |

பட்டுக்கூடுகள் விற்பனை மதிப்பில் **0.75** சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் இந்த பட்டுக்கூடு அங்காடிகளின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வருடம் | பட்டுக்கூடுகள் வர்த்தகம் (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | லெவி வசூல் (ரூ. இலட்த்தில்) |
|---|---|---|---|
| 2015-2016 | 1862.72 | 4728.44 | 71.66 |
| 2016-2017 | 1753.80 | 6480.19 | 97.29 |
| 2017-2018 | 1720.26 | 7787.54 | 117.06 |

## 9.8 அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய நிலையானது பட்டுத் தொழிலின் மற்றொரு முக்கிய பிரிவாகும். எட்டு அரசு பலமுனை பட்டுநூற்பு அலகுகள் மற்றும் மூன்று அரசு பட்டு முறுக்கேற்றும் அலகுகள் பட்டு நூற்பு தொழில் முனைவோருக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. அரசு பட்டு நூற்பகங்கள் பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்தி பொருளான பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன. இந்த அரசு பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு **35** மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை ஆகும்.



அரசு பலமுனை பட்டு நூற்பு அலகு, நாகர்கோவில்



அரசு பட்டு முறுக்கேற்றும் அலகு, தென்காசி

கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசு பட்டுநூற்பு அலகுகளின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| **வருடம்** | **பட்டு உற்பத்தி (கிலோவில்)** | **பட்டு நூலின் மதிப்பு (ரூ.இலட்சத்தில்)** | **விற்பனை செய்யப்பட்ட உப பொருட்கள் மதிப்பு (ரூ. இலட்சத்தில்)** | **இலாபம் / நட்டம் (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 2015-2016 | 12196.35 | 288.25 | 36.47 | 10.58 |
| 2016-2017 | 12639.80 | 377.89 | 34.43 | -2.56 |
| 2017-2018 | 11982.55 | 421.93 | 30.66 | 1.00 |

கடந்த மூன்றாண்டுகளில் இந்த அரசு பட்டு முறுக்கேற்றும் அலகுகளின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| **வருடம்** | **முறுக்கேற்றுப்பட்ட பட்டு நூல் (கிலோவில்)** | **முறுக் கேற்றப்பட்ட பட்டு நூலின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்)** | **விற்பனை செய்யப்பட்ட உப பொருட்கள் மதிப்பு (ரூ. இலட்சத்தில்)** | **இலாபம் / நட்டம் (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 2015-2016 | 4880.35 | 160.93 | 0.80 | 12.49 |
| 2016-2017 | 5278.20 | 188.69 | 1.33 | 15.09 |
| 2017-2018 | 5180.55 | 184.43 | 1.02 | 13.05 |

## 9.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

96 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள், 35 பலமுனை பட்டு நூற்பு அலகுகள், 26 சர்கா நூற்பு அலகுகள் மற்றும் 3 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் ஆகியன தனியார் பட்டுநூற்புத் தொழில் முனைவோரால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த தனியார் பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 452 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். தனியார் நூற்பு பிரிவுக்கு துறையின் மூலம் பல்வகை உதவிகள் வழங்கப்படுகின்றன. உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் அனைத்தும் உள்நாட்டிலேயே பயன்படுத்தப்படுவதன் மூலம் பட்டு விவசாயிகளின் உழைப்பிற்கேற்ற நியாயமான விலை பெற்றிட ஏதுவாக அதிக எண்ணிக்கையில் நூற்பு அலகுகள் நிறுவிட முன்வரும் தொழில்முனைவோர் பலவகைகளிலும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.



**தானியங்கி பட்டு நூற்பு அலகு, கோபிச்செட்டிபாளையம்**

கடந்த மூன்றாண்டுகளில் இந்த தனியார் பட்டு நூற்பு அலகுகளின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | வருடம் | உரிமம் பெற்ற ஏனங்கள் (எண்ணிக் கை) | இயங்கும் ஏனங்கள் (எண்ணிக் கை) | உற்பத்தி திறன் (மெட்ரிக் டன்னில்) | கச்சாப் பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2015-2016 | 985 | 887 | 431.000 | 210.722 | 4686.47 |
| 2 | 2016-2017 | 980 | 887 | 429.000 | 187.950 | 5647.89 |
| 3 | 2017-2018 | 1033 | 932 | 452.000 | 230.880 | 8170.84 |

## 9.10 தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

ஓசூரில் உள்ள தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் பட்டுவளர்ச்சித் துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

“பட்டு மலர்” எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுவளர்ச்சிக்கு உதவிடும் காலத்திற்கேற்ற புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணைபுரிகிறது.



**தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்**

2017–2018 ஆம் ஆண்டில் ஒசூர், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையத்தின் சாதனை விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயிற்சி யாளர்கள் | கால அளவு | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மத்திய பகுதி திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சி | விவசாயிகள் | 5 நாட்கள் | 1716 |
| 2 | அட்மா திட்டம் | விவசாயிகள் | 3 நாட்கள் | 240 |
| 3 | புதிதாக தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர் மற்றும் இளநிலை ஆய்வாளர்களுக்கு பயிற்சி | பணியாளர்கள் | 30 நாட்கள் | 173 |

## 9.11 அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் மூலம் வர்த்தகம் செய்யப்படுகிறது. இப்பட்டு பரிமாற்றகம் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பட்டு பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டு காஞ்சிபுரம் பட்டு பதப்படுத்துதல் மற்றும் பரிசோதனை நிலையத்தால் பரிசோதனை செய்யப்படுகிறது. பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டிற்கு நிலவும் விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப்பட்டு ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் “டான்சில்க்” போன்றோர் வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று

பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டு விற்பனைத் தொகை பட்டுநூற்பாளர்களுக்கு உடனடியாக மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படுகிறது.



**காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் கச்சாப் பட்டு ஏலம்**

கடந்த மூன்றாண்டுகளில் காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | வருடம் | கச்சாப் பட்டு நூல் வர்த்தகம் | | லெவி வசூலிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | |
| 1 | 2015-2016 | 89.756 | 2021.37 | 30.47 |
| 2 | 2016-2017 | 81.520 | 2450.21 | 36.76 |
| 3 | 2017-2018 | 71.469 | 2529.53 | 37.94 |

டான்சில்க் நிறுவனம், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் கச்சா பட்டு நூல் கொள்முதல் செய்யும் அளவு குறைந்துவிட்டதால் அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் கச்சா பட்டுநூல் வர்த்தகம் குறைந்துள்ளது. அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் கச்சா பட்டு நூல் வர்த்தகத்தை அதிகரிக்கும் வகையில் டான்சில்க் நிறுவனமும் மற்ற பெரு நெசவாளர்களும் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிக அளவில் கச்சாப் பட்டு நூலை கொள்முதல் செய்யவும், பட்டு நூற்பாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த கச்சாப் பட்டு நூலினை அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் விற்பனை செய்யவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

### 9.12 கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டு வளர்ச்சித்துறையின் கீழ் பட்டு நூற்பாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம் எனப்படும் 25 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்) எனப்படும் ஒரு தலைமை கூட்டுறவு இணையமும் செயல்படுகின்றன.

பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் இந்த தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆவர். சங்கம் செயல்படும் பகுதிகளில் வசிக்கும் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதும்

அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய குறிக்கோளாகும். பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவதும், மூலப்பொருட்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவதும் முடிவுற்றப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதும் இந்த தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் இதர செயல்பாடுகளாகும்.

### 9.12.1 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டுக்கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை கூட்டுறவு இணையமாக, 1978–ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது. ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் இதன் கிளைகள் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இணையம் பெருமளவு பட்டினை

கொள்முதல் செய்து தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் "டான்சில்க்" இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையகங்கள் மற்றும் தனியார் விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.



**சேலம் "டான்சில்க்" கிளையில் முறுக்கேற்றிய பட்டு விற்பனை**

கடந்த மூன்றாண்டுகளில் காஞ்சிபுரம் டான்சில்க் நிறுவனத்தின் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | வருடம் | கொள்முதல் | | விற்பனை | | நிகர லாபம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | |
| 1 | 2015–2016 | 300 | 8412.04 | 304 | 8552.00 | 107.73 |
| 2 | 2016–2017 | 263 | 9071.64 | 263 | 9091.39 | 91.89 |
| 3 | 2017–2018 | 223 | 9035.43 | 222 | 8923.83 | 61.60 |

கடந்த இரண்டு ஆண்டுகளில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பட்டு சேலைகள் விற்பனை குறைந்ததன் காரணமாக “டான்சில்க்” நிறுவனத்தின் பட்டு நூல் விற்பனை குறைந்துள்ளது. மேலும் முறுக்கேற்றிய பட்டு ஜரிகை போன்றவற்றிற்கு சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டதன் காரணமாக பட்டு சேலைகளின் விலை அதிகரித்ததால் பட்டு சேலைகளின் விற்பனை மேலும் குறைந்துவிட்டது.

“டான்சில்க்” நிறுவனத்தின் பட்டு நூல் வர்த்தகத்தினை மேம்படுத்தும் வகையில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், தனிப்பட்ட நெசவாளர்களும் “டான்சில்க்” நிறுவனத்திடம் அதிக அளவில் பட்டு நூல் வர்த்தகம் செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**10. கச்சாப்பட்டு உற்பத்தி**

பலசுழற்சி கலப்பின(மஞ்சள்) பட்டுக்கூடுகளிலிருந்து எடுக்கப்படும் கச்சாப்பட்டு நூலின் தரம் குறைவு என்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுவதில்லை. விசைத்தறியில் பயன்படுத்தக்கூடிய தரம்மேம்பட்ட பட்டு நூலுக்காக இருசுழற்சி (வெண்பட்டு) கலப்பினம் உருவாக்கப்பட்டது. இருசுழற்சி (வெண்பட்டு) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 1000 முதல் 1200 மீட்டர் ஆகும். ஆனால், பலசுழற்சி கலப்பின(மஞ்சள்) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 700–800 மீட்டர் மட்டுமே. மஞ்சள் பட்டுக்கூட்டின் பட்டு நூலை விட வெண்பட்டுக் கூட்டின் பட்டு நூல் அதிக உறுதியுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

2017–2018–ஆம் ஆண்டின் 1984 மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தி 1775 மெட்ரிக் டன் ஆகும். வெண்பட்டு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில் **தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.** பட்டு நூலின் சராசரி விலை ரூ.3539/– என்ற அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூலின் மதிப்பு ரூ.702 கோடி ஆகும்.

## 11. பயிர் காப்பீடு

பட்டுக்கூடு மகசூல் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர் காப்பீட்டுப் பிரிமீயத் தொகையில் 90 சதவீதம் அரசால் இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படுகிறது. பட்டு விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடு அடங்கிய இத்திட்டத்தில் 21,500 விவசாயிகள் பயனடையும் வகையில், 100 கலப்பின(மஞ்சள்) முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.160.75/—ம், 100 வெண்பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.175.75/—ம், விவசாயிகளின் 10 சதவீத பங்களிப்புடன் சேர்த்து பயிர் காப்பீட்டிற்கான பிரீமியத் தொகையாக செலுத்தப்படுகிறது. பட்டு விவசாயிகளுக்கு பட்டுப்புழு பாதிக்கப்பட்டுள்ள பருவத்தின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை காப்பீட்டு நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் பயிர் காப்பீட்டின் கீழ் பிரீமியத் தொகை, விடுவிக்கப்பட்ட காப்பீட்டு தொகை, பயனடைந்த விவசாயிகள் போன்ற விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | வருடம் | பயனடைந்த விவசாயிகள் | பிரீமியத் தொகை (ரூ. இலட்சத்தில்) | விடுவிக்கப்பட்ட காப்பீட்டு தொகை | | | மொத்தத் தொகை (ரூ. இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | இயற்கை சீற்றம் | எண்ணிக் கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | |
| 1 | 2015–2016 | 1000 | 18.40 | பயிர் இழப்பு | 12 | 0.95 | 3.97 |
| | | | | மனை சேதம் | 14 | 3.02 | |
| 2 | 2016–2017 | 20000 | 32.65 | பயிர் இழப்பு | 192 | 10.48 | 20.14 |
| | | | | மனை சேதம் | 11 | 7.66 | |
| | | | | தனி நபர் விபத்து காப்பீடு | 1 | 2.00 | |
| 3 | 2017–2018 | 21500 | 37.63 | பயிர் இழப்பு | 31 | 2.19 | 2.78 |
| | | | | மனை சேதம் | 2 | 0.59 | |

## 12. 2017–2018–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டத் திட்டங்கள்

### 12.1 மாநிலத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின், ஜவுளி அமைச்சகம் ‘‘கிரியா ஊக்கித் திட்டத்தின்’’ கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கான நிதியுதவியை **2015–2016–**ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் முக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து வழங்க மாநில அரசு முடிவெடுத்து

**2017–2018–**ஆம் ஆண்டிற்கு ரூ.**17.91** கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

## மாநிலத் திட்டம் – 2017–2018 – முன்னேற்றம்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | இயல்பு (அளவு) | | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | ஒதுக்கீடு | செலவினம் | மீதம் |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 3500 ஏக்கர் | 3500 ஏக்கர் | 367.50 | 367.50 | 0.00 |
| 2 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1000 எண்ணிக்கை | 1000 எண்ணிக்கை | 525.00 | 524.75 | 0.25 |
| 3 | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–I | 50 எண்ணிக்கை | 50 எண்ணிக்கை | 41.25 | 41.25 | 0.00 |
| 4 | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–II | 550 எண்ணிக்கை | 550 எண்ணிக்கை | 481.25 | 481.25 | 0.00 |
| 5 | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–III | 200 எண்ணிக்கை | 200 எண்ணிக்கை | 126.00 | 126.00 | 0.00 |
| 6 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல் | 1000 ஏக்கர் | 806.05 ஏக்கர் | 250.00 | 250.00 | 0.00 |
| | | | **மொத்தம்** | **1791.00** | **1790.75** | **0.25** |

## 12.2 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2017–2018–ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் ரூ.183.74 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. திட்டம் நடைமுறைப்படுத்தப்–பட்டதன் முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பணிகள் | நிதி ஒதுக்கீடு | செலவினம் | மீதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 1 | இருசுழற்சி இன பட்டு முட்டைகளுக்கு போக்குவரத்து செலவின உதவியளித்தல் | 30.00 | 30.00 | 0.00 | - |
| 2 | வெண்பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்குதல் (பலமுனை பட்டு நூற்பக பட்டு நூல்) | 20.00 | 19.97 | 0.03 | – |
| 3 | 'பட்டு மலர்' மாத இதழ் 2017–2018 –ஆம் ஆண்டுக்கு அச்சிட்டு வழங்குதல் | 13.00 | 13.00 | 0.00 | – |
| 4 | அரசு பட்டு வித்தகம், ஆவலப்பள்ளி (இ) ஒசூர் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்பு கட்டணம். | 6.11 | 6.08 | 0.03 | – |
| 5 | கிருஷ்ணகிரி அரசு பட்டு வித்தகம், குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்பு கட்டணம் | 7.14 | 7.14 | 0.00 | – |
| 6 | கைப்பேசி வாடகை கட்டணத்திற்கு ஒதுக்கீடு | 1.23 | 1.23 | 0.00 | – |

| வ. எண் | பணிகள் | நிதி ஒதுக்கீடு | செலவினம் | மீதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 7 | அரசு அலகுகளில் உள்ள கட்டடங்கள் புனரமைப்பு (கட்டுமானப் பணிகள்) | | | | |
| அ) | பதினொன்று தொழில் நுட்ப சேவை மைய கட்டடங்கள் புனரமைப்பு பணிகள் (தருமபுரி, அன்னூர், பொங்கலூர், குடிமங்கலம், சுல்தான்பேட்டை, குண்டடம், தாளவாடி, திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், முசிறி மற்றும் பழையூர்) | 34.41 | 34.41 | 0.00 | – |
| ஆ) | அரசு வித்தக கட்டடங்கள் புனரமைத்தல்: விவசாயிகள் பயிற்சி மைய கட்டடம் (வித்தகம்) தாளவாடி வித்தக கட்டடம், தாளவாடி வித்தக குளிர்பதன அறை மற்றும் ஈரோடு வித்தக கட்டடம் | 7.32 | 7.32 | 0.00 | – |
| இ) | அரசு பட்டுக்கூடு அங்காடி, தாளவாடி கட்டடம் புனரமைத்தல் | 1.41 | 1.41 | 0.00 | – |
| ஈ) | அரசு பட்டு நூற்பு அலகு, தாளவாடி கட்டடம் புனரமைத்தல் | 1.43 | 1.43 | 0.00 | – |
| உ) | அரசு பட்டு விதைப் பண்ணை மசக்கல் கட்டடம் புனரமைத்தல் | 7.35 | 7.35 | 0.00 | – |
| ஊ) | அரசு பட்டுப் பண்ணை கட்டடங்கள் புனரமைத்தல்: கருக்கமடை (மல்பெரி நாற்று உற்பத்தி மையம்), விவசாயிகள் பயிற்சி மையம், மணிகண்டம் பண்ணை கட்டடங்கள் புனரமைத்தல் | 3.90 | 3.90 | 0.00 | – |

| வ. எண் | பணிகள் | நிதி ஒதுக்கீடு | செலவினம் | மீதம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| எ) | அரசு அலகுகளில் ஆழ்துளை கிணறு தோண்டுதல்: பி2. பண்ணை, மசக்கல், பி2. பண்ணை, மசினகுடி, உதவி இயக்குநர் அலுவலகம், குன்னூர் (ம) பி2 பண்ணை, மயிலாடும்பாறை | 9.65 | - | 9.65 | பரிசீல னையில் உள்ளது. |
| ஏ) | குன்னூர் உதவி இயக்குநர் குடியிருப்பு கட்டடம் புனரமைத்தல் | 2.35 | 2.35 | 0.00 | – |
| ஐ) | குன்னூர், திருச்சி உதவி இயக்குநர் அலுவலக கட்டடங்கள் புனரமைத்தல் | 6.96 | 6.96 | 0.00 | – |
| ஒ) | சேலம், இயக்குநர் அலுவலக சிமெண்ட் பேவர் பிளாக் பதித்தல் | 12.90 | 12.90 | 0.00 | – |
| 8 | அரசு பெரியளவு பட்டுப்பண்ணைகளில் கூடுதல் மல்பெரி தோட்டங்கள் உருவாக்குதல் | | | | |
| | அ) பெரிய அளவு பட்டுப்பண்ணை, கோலட்டி | 8.89 | 8.89 | 0.00 | – |
| | ஆ) பெரிய அளவு பட்டுப்பண்ணை, மாதஹள்ளி | 9.69 | 9.69 | 0.00 | – |
| | **மொத்தம்** | **183.74** | **174.03** | **9.71** | |

## 12.3 பரிசுகளும் வெகுமதிகளும்

சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கிட **2017–2018–**ஆம் ஆண்டில் அரசால் ரூ.**20.85** இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது**.** மாவட்ட அளவில் சென்னை

நீங்கலாக, **31** மாவட்டங்களில் தலா மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கிட தேர்வு செய்யப்பட்டனர்.

மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகளின் உற்பத்தித் திறன் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| **வ. எண்.** | **சிறந்த பட்டு விவசாயிகளின் பெயர்** | **தகுதி** | **முட்டை அறுவடை/ ஏக்கருக்கு (முட்டை தொகுதி)** | **100 முட்டை தொகுதி களுக்கு சராசரி அறுவடை (கிலோ)** | **ஈட்டிய ஆண்டு வருமானம் ஏக்கருக்கு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| 1. | பொன்ராஜ், த/பெ.நடராஜ், ஆத்துக்கிணத்துப்பட்டி (உடுமலைப்பேட்டை) | முதல் பரிசு | 1194 | 92.5 | 6.016 |
| 2. | ஈஸ்வரமூர்த்தி த/பெ.ராமசாமி, நந்தவனம்பாளையம் (ஈரோடு) | 2வது பரிசு | 1041 | 98.6 | 5.159 |
| 3. | பழனிவேல், த/பெ.கந்தசாமி, திருச்செங்கோடு (நாமக்கல்) | 3வது பரிசு | 919 | 99.0 | 4.720 |

மாவட்ட அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே **ரூ.25,000/–ம்**, **ரூ.20,000/–ம்** மற்றும் **ரூ.15,000/–ம்**, மாநில அளவில் முதலாவது,

இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/–ம் 2018 ஏப்ரல் 28 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 12.4 மத்திய பகுதித் திட்டம்

கிரியா ஊக்கித் திட்ட மறு சீரமைப்புக்குப் பின் மத்திய பட்டு வாரியம் ஒரு சில உட்கூறு இனங்களுக்கு மட்டும் நிதியுதவி அங்கீகரித்து 2017–2018–ஆம் ஆண்டிற்கு ரூ. 607.435 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

**மத்திய பகுதித் திட்டம் – 2017–2018– முன்னேற்றம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு | | நிதி செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | நிதி ஒதுக்கீடு | செல வினம் | மீதம் | |
| 1 | கிசான் மல்பெரி நாற்றுகள் உற்பத்திக்கு உதவியளித்தல் | 1.00 | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | – |
| 2 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரக சாகுபடிக்கு உதவியளித்தல் | 22.60 | 22.60 | 9.04 | 9.04 | 0.00 | – |
| 3 | நீர்ப்பாசனம் மற்றும் நீர்சேமிக்கும் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு உதவியளித்தல் | 10.00 | 7.00 | 2.40 | 2.40 | 0.00 | – |

| வ. எண். | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு | | நிதி செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | நிதி ஒதுக் கீடு | செல வினம் | மீதம் | |
| 4 | மண்புழு உரம் உற்பத்திக்கூடம் அமைக்க உதவியளித்தல் | 2 | 2 | 0.32 | 0.32 | 0.00 | – |
| 5 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்குதல் | 7 | 7 | 3.92 | 3.92 | 0.00 | – |
| 6 | தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட உதவியளித்தல் (600 சதுர அடி) (ஒரு அறு– வடைக்கு 100 மு.தொ. வளர்ப்பு) | 7 | 7 | 14.00 | 14.00 | 0.00 | – |
| 7 | பட்டு நூற்பு மைய கட்டடம் கட்ட உதவியளித்தல் | 1 | - | 6.40 | - | 6.40 | பணிகள் நடை பெற்று வருகிறது. |
| 8 | பலமுனை பட்டு நூற்பு இயந்திரம் நிறுவ உதவியளித்தல் | 1 | - | 13.67 | - | 13.67 | பணிகள் நடை பெற்று வருகிறது. |
| 9 | விவசாயிகளுக்கு முன்னோடி பட்டு விவசாயிகளின் தோட்டங்களில் பயிற்சி வழங்குதல் | 23 | 23 | 0.81 | 0.81 | 0.00 | – |

| வ. எண். | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு | | நிதி செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | நிதி ஒதுக் கீடு | செல வினம் | மீதம் | |
| 10 | தகவல், கல்வி, தொடர்பு (பரப்புரை) | - | - | 2.00 | - | 2.00 | பரிசீல னையில் உள்ளது |
| 11 | சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல் | 1000 | 979.30 | 295.08 | 294.85 | 0.23 | - |
| 12 | விவசாயி–களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் | 2000 | 2000 | 140.00 | 140.00 | 0.00 | |
| 13 | ஓசூரில் உள்ள பலமுனை குளிர்பதன நிலையத்தை மேம்படுத்துதல் | 1 | 1 | 15.00 | 15.00 | 0.00 | |
| 14 | இளம்புழு வளர்ப்பு மையத்தினை பரவலாக்கு – தலுக்கு உதவியளித்தல் | 3 | 2 | 18.00 | 12.00 | 6.00 | பிரேர ணை எதிர் பார்க்கப் படுகிறது |
| 15 | நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் தரமான கிருமிநாசினி மற்றும் பட்டு பல்நோக்கு ஆலோசனை மையங்களுக்கு உதவியளித்தல் | 4 | 3 | 3.50 | 2.62 | 0.87 | பிரேர ணை எதிர் பார்க்கப் படுகிறது |

| வ. எண். | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு | | நிதி செலவினம் (ரூ.இலட்சத்தில்) | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | நிதி ஒதுக் கீடு | செல வினம் | மீதம் | |
| 16 | வெண்பட்டு உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல் (தானியங்கி பட்டு நூற்பக பட்டு நூல்) | 25000 | 2337 | 37.50 | 3.51 | 33.99 | செய லாகத்தில் உள்ளது |
| 17 | ஏற்காடு பட்டு சுற்றுலா மையம் நிறுவுதல் | 1 | - | 25.00 | - | 25.00 | பணி நடை பெற்று வரு கிறது. |
| 18 | தகவல் தொழில் நுட்ப மேலாண்மை (பட்டு இணைய தளம்), டிஜிடலாக்கம், தகவல், கல்வி, தொடர்பு - பட்டு விவசாயிகள், நூற்பாளர்களின் விவரங்கள் அடங்கிய அடையாள அட்டை வழங்குதல் | 25000 | - | 19.80 | - | 19.80 | பணிகள் நடை பெற்று வருகிறது. |
| | **மொத்தம்** | | | **607.44** | **499.47** | **107.97** | |

## 13. பட்டு சுற்றுலாத் திட்டம், ஏற்காடு

ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் பட்டு சுற்றுலாத்தலம் அமைத்திட தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின் கீழ் 2015–2016–ஆம் ஆண்டில் ரூ.250.00 இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டை குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குழந்தைகளிடையே அறிவியல் அறிவைப் பயிற்றுவிக்கும் குறிக்கோளினையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. மல்பெரித் தோட்டம் முதல் பட்டாடைகள் வரையிலான உற்பத்தி செயல்பாடுகள் இம்மையத்தில் காட்சி படுத்தப்படவுள்ளன.

காட்சி அரங்குகள், உணவகம், விற்பனைக் கூடங்கள் ஆகியவற்றிற்கான கட்டுமானப் பணிகள் முடிந்துள்ளன. வேலி அமைத்தல், நடைபாதைக் கற்கள் பதித்தல், ஆழ்துளைக் கிணறு தோண்டுதல், நடைபாதைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. குழந்தைகளுக்கான விளையாட்டு சாதனங்களும் அறிவியல் சாதனங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய பட்டு நூற்பு, பட்டு முறுக்கு மற்றும் பட்டு நெசவு இயந்திரங்களின் மாதிரிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மண் முதல் பட்டு நூல் வரை


தேவையான அனைத்து காட்சிப் பொருட்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இச்சுற்றுலா மையம் **2018–2019**–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 14. பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள்


கீழ்க்கண்ட இனங்களில் சாதனை கடந்த ஆண்டுகளை விட மேம்பட்டு **தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.**

- 2017–2018–ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான தேசிய சராசரி பட்டுக்கூடு உற்பத்தி திறன் **60.240 கிலோகிராமாக** உள்ள நிலையில், மாநில சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் **80.000 கிலோகிராமாக** உள்ளது.
- 2017–2018–ஆம் ஆண்டின் **மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தி 89 சதவீதம்** ஆகும். தமிழ்நாட்டில் 2017–2018–ஆம் ஆண்டில் 1775 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2016–2017–ஆம் ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 85 சதவீதத்தை விட இது கூடுதலாகும்.


- வெண்பட்டுக்கூடு உற்பத்தியினை அதிகரித்திட 28 கிராமங்களில் தொகுப்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 100 நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு 78.400 கிலோகிராமாக இருந்த பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 2017–2018–ஆம் ஆண்டில் 81.000 கிலோ கிராமாக அதிகரித்துள்ளது.





**2017–2018–ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**





**முக்கிய மாநிலங்களின் 2017–2018–ஆம் ஆண்டு பட்டு நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)**




**முக்கிய மாநிலங்களின் 2017–2018–ஆம் ஆண்டு வெண்பட்டு நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)**




**தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**




**2017–2018–ஆம் ஆண்டில் தொகுப்பு அபிவிருத்தி திட்ட பகுதிகளில் பாரம்பரிய மாநிலங்களில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**

## 15. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்

### 15.1 பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை

- சிறு, குறு விவசாயிகளுக்கு உதவியளித்தல்.
- தீவிர சாகுபடியினை ஊக்குவித்தல்.
- பட்டு வளர்ச்சியில் விரிவாக்க அணுகுமுறை.
- அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- திறன்மேம்பாடு மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம்.
- சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி.
- பட்டுத் தொழில் விரிவாக்க அமைப்புக்களை வலுப்படுத்துதல்.
- அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- நோயற்ற முட்டைத் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்.
- வித்தகங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தரச்சான்று பெறுதல்.
- தொழில்நுட்ப மேம்பாடு.

- மக்களில் ஒரு பிரிவினர் விரும்பும் ''அஹிம்சா பட்டினை'' உற்பத்தி செய்யவும், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மக்களுக்கு, குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு, வேலைவாய்ப்பினை ஏற்பத்தித் தரவும் மாநிலத்தில் ஈரி பட்டுப்புழு வளர்ப்பை ஊக்கப்படுத்துதல்.

## 15.2 பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நிலை

- இறக்குமதி பட்டுக்கு ஈடான தரம் வாய்ந்த வெண்பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- மூன்று தானியங்கி பட்டு நூற்பு அலகுகளையும் அதிக அளவில் பலமுனை பட்டு நூற்பு அலகுகளையும் ஏற்படுத்துதல்.
- ஒரு தானியங்கி "டூபியான்" பட்டு நூற்பு அலகு ஏற்படுத்துதல்.
- தரம், உற்பத்தித் திறன், உற்பத்திச் செலவினம் குறைப்பு மற்றும் பட்டுக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொழில்முனைவோர்க்கு திறன் பயிற்சி அளித்தல். அதிக அளவில் பட்டுநூற்பு தொழிலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் நூற்பு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 16. 2018–2019–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2018–2019–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | | 2018–2019 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **திட்டப் பணிகள்** | | |
| அ | 1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 100.00 | 290.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்) | 190.00 | |
| ஆ | புதிய திட்டங்கள் | | 1126.86 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | | **1416.88** |
| 2 | **திட்டம் சாரா பணிகள்** (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன) | | 6872.10 |
| | **ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | **8288.98** |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்** பொதுத் துறை நிறுவனமாக **26.07.1973** அன்று தொடங்கப்பட்டது. ***"பூம்புகார்"*** என அனைவராலும் அறியப்பட்ட இந்நிறுவனம் **01.08.1973** அன்று முதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் உலகமெங்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்குடனும், தமிழக கைவினைஞர்களின் கடுமையான உழைப்பினால் உருவாக்கப்பட்ட பித்தளை, பஞ்சலோகம், மரம், கல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட தனித்தன்மை வாய்ந்த கைவினைப்பொருட்களை வெளிப்படுத்துவதை குறிக்கோளாகவும் கொண்ட தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு :

- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்.
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்.

- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்தல்.
- கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் குறைத்தல் / நீக்குதல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.
- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.
- கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

## 2. விற்பனை நிலையங்கள்

இந்நிறுவனம் சென்னை, சென்னை விமான நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, IIT வளாகம் சென்னை, எழும்பூர் அருங்காட்சியகம், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை, மாமல்லபுரம், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள தனது 17 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப்பொருட்களை விற்பனை செய்து **571** கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.



**பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை**

## 3. கண்காட்சிகள்

பூம்புகார் நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களிலும், தமிழகத்திலுள்ள நகரங்களிலும் விற்பனையுடன் கூடிய கைத்திறக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. காந்தி சில்ப் பஜார் மற்றும் கிராப்ட் பஜார் போன்றவற்றை இந்நிறுவனம் நடத்தும் பொழுது இவற்றில் பங்குகொள்ள, நாடெங்கிலுமுள்ள கைவினைஞர்கள் அழைக்கப்படுவர். பூம்புகார் 2018–ஆம் ஆண்டு வாங்குவோர் - விற்போர் சந்திப்பினை நடத்த உள்ளது. பூம்புகார் ITPO மற்றும் EPCH ஆகிய வர்த்தக நிறுவனங்களுடன் சேர்ந்து சர்வதேச கண்காட்சிகளிலும் பங்குபெற உள்ளது.

2017–2018–ஆம் ஆண்டிற்கான கண்காட்சிகளின் விற்பனை விவரம்:

| விற்பனை நிலையங்கள் மற்றும் வெளியூர் கண்காட்சிகள் | மொத்தம் நடத்தப்பட்ட கண்காட்சிகள் | மொத்த விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| விற்பனை நிலைய கண்காட்சிகள் | 88 | 345.51 |
| வெளியூர் கண்காட்சிகள் | 65 | 420.53 |
| **மொத்தம்** | **153** | **766.04** |

**மேற்படி கண்காட்சிகள் மூலம் 5410 கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது.**

**4. உற்பத்தி நிலையங்கள்**

நாச்சியார்கோவில் (பாரம்பரிய பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள்), வாகைகுளம் (பித்தளை மலபார் விளக்குகள் மற்றும் பிற விளக்குகள்), சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத்தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச்சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 இடங்களில் பூம்புகாருக்கு சொந்தமான உற்பத்தி நிலையங்கள் உள்ளன. இந்த உற்பத்தி

நிலையங்களில் **10** நிரந்தர கைவினைஞர்களும் **67** துண்டு கூலி கைவினைஞர்களும் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஆண்டில் **(2017-2018)** இந்நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு ரூ.**326.36** இலட்சம் ஆகும். **2018–2019**–ஆம் ஆண்டிற்கு ரூ.**665.00** இலட்சம் மதிப்பிலான உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு:

| **வருடம்** | **உற்பத்தி (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| 2013-2014 | 500.10 |
| 2014-2015 | 540.87 |
| 2015-2016 | 379.94 |
| 2016-2017 | 519.85 |
| 2017-2018 | 326.36 |



**தஞ்சாவூர் கலைத்தட்டு**

**5. விற்பனை அளவு**

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருகிறது. **2016–2017**–ஆம் ஆண்டில் விற்பனை மதிப்பு ரூ.**4036.00** இலட்சம் அடைந்தது. இக்கழக வரலாற்றில் பதிவாகியுள்ள விற்பனையில் இதுவே அதிகபட்சமாகும். கடந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் ரூ.**3530.00** இலட்சம் விற்பனை செய்துள்ளது. சென்ற ஆண்டு பல அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய சிறப்பு ஆணைகள் சுமார் ரூ.**1097.00** இலட்சம் கிடைக்க தாமதமானதால் விற்பனை சரிவு ஏற்பட்டது. எனினும் **2018–2019**–ஆம் ஆண்டில் பூம்புகார்

நிறுவனம் ரூ.**6500.00** இலட்சம் விற்பனை எய்தும் என நம்புகிறது.

பெறப்பட்டுள்ள சிறப்பாணைகள்:

| வ. எண். | துறை / நிறுவனத்தின் பெயர் | திட்டங்களின் பெயர் | சிறப்பாணையின் மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | சுற்றுலாத் துறை | தகவல் மையம் அமைத்தல் | 152.00 |
| 2. | சுற்றுலாத் துறை | பூங்கா அமைத்தல் | 279.00 |
| 3. | மாதேஸ்வரன் மலைக் கோயில் | மரத்தேர் வேலை | 24.00 |
| 4. | திரைப்பட விருதுகள் | விருதுகள் | 320.00 |
| 5. | காமராஜ் துறைமுகம் | பூங்கா அமைத்தல் | 175.00 |
| 6. | தமிழ்நாடு இல்லம் | அழகுப்படுத்து –தல்/ புதுப்பித்தல் | 109.00 |
| 7. | சேலம் விமானநிலையம் | அழகுப்படுத்து –தல்/ புதுப்பித்தல் | 10.00 |
| 8. | பாடி திருவல்லீஸ்வரர் கோயில் | பித்தளை வேலை | 28.00 |
| | | **மொத்தம்** | **1097.00** |

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு :

| **வருடம்** | **விற்பனை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| 2013 - 2014 | 3108.00 |
| 2014 - 2015 | 3369.00 |
| 2015 - 2016 | 3450.00 |
| 2016 - 2017 | 4036.00 |
| 2017 - 2018 | 3530.00 |

## 6. தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட மாற்றம்

நிலையான புதிய முயற்சி மற்றும் பன்முகத் தன்மையினால் பூம்புகாரின் வளர்ச்சி முழுமையான அளவில் தொடர்கிறது. தற்போதைய மாற்றத்தின் மூலம் **2013–2014–**ஆம் ஆண்டு ரூ.**3108.00** இலட்சமாக இருந்த விற்பனை அளவு **2016–2017–**ஆம் ஆண்டில் ரூ.**4036.00** இலட்சமாக உயர்ந்துள்ளது.

## 6.1 திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன் ஏற்பட்ட சவால்கள்

நடைமுறையில் உள்ள சில முக்கிய மரபு சூழல் சவால்கள்:

- மனித ஆற்றல் மற்றும் அதிக அளவிலான காகித கோப்பு செயல்பாடுகளினால் முக்கிய முடிவுகள் எடுப்பதில் ஏற்பட்ட தாமதம்.

- பரவலாக்கப்பட்ட மனித வளம் மற்றும் சம்பளப் பட்டியல் மேலாண்மை.
- பாரம்பரிய நடைமுறைகள் காரணமாக புதிய வடிவமைப்பை உருவாக்குவதிலும் வாடிக்கையாளர்களின் தேவையை முன்னரே அறிந்து அவற்றை துல்லியமாக நிறைவேற்றுவதிலும் ஏற்பட்ட தடங்கல்கள்.
- விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்களில் திறமையான கண்காணிப்பின்மையால் ஏற்பட்ட இழப்பீடுகள்.
- விற்பனையகம் மற்றும் கண்காட்சி அடிப்படையிலான சந்தைபடுத்துதல்.
- வாடிக்கையாளர்கள் மீண்டும் கோரும்போது பிரத்யேக மற்றும் பல்வேறு மாதிரிகளை அவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் உள்ள தடை.
- வாடிக்கையாளர்களுக்கு உகந்த பிரத்தியேக விற்பனை பிரதிநிதியின் அணுகுமுறையின்மை.
- புதுமையான மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்வதில் உள்ள பற்றாக்குறையால் G2G, G2B மற்றும் B2B முறையில் விற்பனை பரிவர்த்தனை செய்வதில் ஏற்படும் குறைபாடு.

- பரவலான மற்றும் கையினால் எழுதப்படும் விலைச் சீட்டினால் சீரான விற்பனை மற்றும் பொருட்கள் நிர்வகித்தலில் உள்ள குறைபாடுகள்.

## 6.2. புதிய நிருவாகத்திறன்

பூம்புகாரின் சந்தை மற்றும் தேவையினை எதிர்கொள்ளும் திறன் மற்றும் குறைந்தபட்ச விலையில் உற்பத்திச் செய்யும் திறன் ஆகியவற்றை சிறந்த முறையில் அடைய போதுமான அளவு தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

நிறுவனத்தின் **1.** நிருவாகம், **2.** சந்தைப்படுத்துதல், **3.** வடிவமைப்பு மற்றும் **4.** உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து தானியங்கி முறையில் செயல்படுத்துதல்.

இத்திட்டம் பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி கீழ்க்கண்ட குறிப்பிட்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கைவினைஞர்கள்:**

கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்கியதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் சரியான முறையில் பதிவு செய்யப்படுகிறது. (நேரடி வேலைவாய்ப்பு, மகளிர் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கும் முன்னுரிமை, புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல்).

**வாடிக்கையாளர்கள் / வாங்குவோர்:**

குறைந்தபட்ச பரிமாற்ற நேரம், நம்பிக்கை மற்றும் நட்பான அணுகுமுறை போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள்/ வாங்குவோரின் ஏற்புத்தன்மை மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

**<u>நிறுவனம்:</u>**

டிஜிட்டல் ஆளுமை மூலம் வர்த்தக ரீதியில் நிலைத் தன்மையோடு பாரம்பரியத் தொழிலை மேம்படுத்தி கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுடன் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்.

பூம்புகார் ஏற்கனவே தனது குறிக்கோளில் வெற்றி பெற்று அதன் பயனை அடைய தொடங்கிவிட்டது. இம்மாற்றத்தின் விரிவான விவரங்கள் கீழ்வருமாறு:

## 6.3. நிருவாக சீர்த்திருத்தங்கள்

**மின்தளம்:**

பூம்புகார் தனக்கென உருவாக்கியுள்ள பல்நோக்கு இணையதளம் www.tnhdcltd.com வாயிலாக பூம்புகார் மற்றும் தொடர்புடைய பிரிவுகளின் வளர்ச்சியினை தொழில் முனைவோர் அறிந்து கொள்ளலாம்.

**மின் தொகுப்புக் களஞ்சியம்:**

தமிழக அரசு, மாநில புதுமை நிதி திட்டத்தின்கீழ் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு www.tnartisaan.com ஏற்படுத்த ரூ.100.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன் ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம் மின் தொகுப்பில்

நலிவுற்ற கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். இது கைவினைஞர்களுக்கு உலகளவில் பெரிய சந்தை ஸ்தலமாகும். இதன் மூலம் ஒரு இலட்சம் கைவினைஞர்களுக்கு வலை பக்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனம் 10000 கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் பொருட்களின் வகைகள் வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைத்தளம் மூலம் காண இயலும். மலைவாழ் கைவினைஞர்களுக்கு உதவி நடவடிக்கை ஏதும் திட்டமிடப்பட்டால் இதன் மூலம் அந்த கைவினைஞர்கள் பற்றிய தகவல்களை கணினி மூலமே பெற முடியும்.

**மின் அலுவலகம்:**

பூம்புகார், நாடெங்கும் உள்ள 17 விற்பனை நிலையங்கள் மற்றும் 7 உற்பத்தி நிலையங்களின் செயல்பாடுகளை, நிறுவன வள திட்டம்(ERP) - மென்பொருள் மூலம் சென்னை நிறுவன அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு அலுவலக உதவியாளர் முதல் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் வரை உள்ள 128 பணியாளர்களும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் அனைத்து 128 பணியாளர்களும் தங்குமிடத்திலிருந்தோ

அல்லது பயணத்தின் போதோ ("எந்த நேரத்திலும், எந்த இடத்திலும்" என்ற அடிப்படையில்) பணி செய்யலாம். மனிதவளம் மற்றும் சம்பளப்பட்டியல் மேலாண்மை சீரமைக்கப்பட்டதன் மூலம் இந்நிறுவனத்தின் மனிதவள மேலாண்மைத்திறன் மேம்பாடு அடைந்துள்ளது. அனைத்து 17 விற்பனை நிலையங்கள் மற்றும் 7 உற்பத்தி நிலையங்களின் கோப்புகளை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பார்வையிட முடியும்.

**மின் ஆய்வு:**

iPad பயன்பாட்டிலுள்ள தொலைதொடர்பு சேவை வழியாக face time செயலியின் வழியாகவோ, ஒலியின் மூலமாகவோ திறனாய்வு நடத்தப்படுகிறது.

**மின் வருகைப்பதிவு:**

பயோ மெட்ரிக் வருகை பதிவு பயன்படுத்தப்படுகிறது.

**மின்தொடர்பு:**

நிறுவன வள திட்டத்தின் உபயோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக அனைத்து இடங்களிலும் வைஃபை (wi-fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

**மின் கண்காணிப்பு:**

17 விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி நிலையங்கள் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் **96** கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து இடங்களும் சரியான முறையில் தலைமை அலுவலகத்தால் கண்காணிப்படுகின்றன.

**6.4. சந்தை வாய்ப்பில் சீர்த்திருத்தங்கள்**

**மின் வணிகம்:**

பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.org என்ற பெயரில் சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. கைபேசி செயலியுடன் இணைந்த வேன் / மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளுஸ் மற்றும் இந்தியா மார்ட் போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேற்கண்ட அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின்

வலைதளப் பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது வரை ரூ.17.96 இலட்சம் வணிகம் எட்டப்பட்டுள்ளது.

**மின் ஊடகங்கள்:**

பூம்புகார் முகநூல், லிங்க்டுஇன், டுவிட்டர், குவாரா, பின்டிரஸ்ட் மற்றும் கூகுள் போன்ற சுமார் 10 பிரம்மாண்ட இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக சந்தை வாய்ப்பை உலகளவில் பெற பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இதற்கான செலவு, செய்தித்தாள்களில் வெளியிடப்படும் விளம்பரத்திற்கு ஆகும் நடைமுறை விளம்பரச் செலவில் ஒரு சிறு பகுதியே ஆகும்.

**மின் குறியீடு:**

அனைத்து 17 விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலை குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனம் விற்பனை புள்ளி விவரங்களை பரிசீலித்து சந்தையில் வேகமாக விற்பனை வாய்ப்புள்ள பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் உற்பத்தி செய்திட திட்டமிட முடிகிறது.

**மின் விலைச்சீட்டு:**

POS இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் 17 விற்பனை நிலையங்களும் பரவலாக்கப்பட்ட மின்னணு விலைச் சீட்டினை சுலபமாகவும், வேகமாகவும் தயாரிக்க இயலுவதுடன் பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

**மின் தகவல் வழங்கல்:**

அனைத்து 21 மேலாளர்களுக்கும் சந்தைப்படுத்தும் கருவியாக ஐ–பேட் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலாளர்கள் சாத்தியமான வாடிக்கையாளரை சந்திக்கும் போது கைவினைப் பொருட்களின் உயர்தர புகைப்படங்களை அவர்களுக்கு காண்பிப்பதுடன் அவர்களுடன் பேஸ்டைம் (face time) மூலம் கலந்துரையாடலாம். இதன் மூலம் நிறுவனத்தின் அறிமுக உரையும் நிகழ்த்தலாம்.

**6.5. வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் சீர்திருத்தங்கள்**

**வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC):**

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிளாஸ்டிக் அச்சு மூலம் பஞ்சலோக சிலைகளை தயாரிக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க தமிழக அரசு ரூ.168.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இவற்றில் எந்த

நேரத்திலும், எந்த இடத்திலும் முப்பரிமாண முறையில் தேவைக்கேற்ப கைவினைப்பொருட்கள் மற்றும் அச்சுக்களை தயாரிக்க முடியும். வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் **08.03.2018** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கைவினைஞர்கள் தினக் கொண்டாட்டத்தின் போது தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் பூம்புகாரின் புதிய வடிவமைப்புக்களை சந்தைபடுத்தும் திறன் பெருமளவு அதிகரிக்கும்.

வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் வடிவமைப்பாளர்கள், கைவினைஞர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைவினைப்பொருட்கள் ஆர்வலர்கள் ஆகியோரின் விவரத் தரவுகளை பராமரித்து இவர்களிடையே தகவல் தொடர்பு வசதியை எளிதாக்கும். மேலும் இந்நிலையம் பல்வேறு பங்களிப்பாளர்களை புதிய உற்பத்தி முயற்சிக்கு கொண்டு வருவதுடன் வெளிநாடு மற்றும் உள்நாட்டிலுள்ள வடிவமைப்பு நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தும்.

**மெய்நிகர்** (Virtual Reality)**:**

பூம்புகார் விற்பனை நிலையங்களை மெய்நிகர் தோற்றத் தொழில் நுட்பம் மூலம் உருவாக்கும் பொருட்டு தமிழக அரசு

புதுமை நிதியின்கீழ் ரூ.217.00 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த மெய்நிகர் தோற்றத் தொழில்நுட்ப கருத்துரு NIC, IIT Madras மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் அடங்கிய குழு வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த உள்ளது.

முப்பரிமாண மென்பொருளின் துணையுடன் தேவைப்படும் சமகாலப் பொருட்களை மெய்நிகர் தோற்ற பிம்பங்களாக வடிவமைக்க பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க இடவசதி மற்றும் தொழில் நுட்ப கட்டமைப்புகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது தலைமை அலுவலகத்தில் இரண்டாவது தளத்தில் அமைத்துள்ளது.

மேலும் மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் பிரதிகள் முப்பரிமாண வடிவில் உருவாக்கப்பட்டு முப்பரிமாண அச்சு இயந்திரம் மூலம் அச்சடிக்கப்பட்டு பின் அவை பஞ்சலோக சிற்பங்களாக பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் தயாரிக்கப்படுகின்றன. பூம்புகாரில் உள்ள பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக்குழு தயாரித்து அதனை மெய்நிகர் தோற்றம் இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன் மூலம்

வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாண பொருட்களை தங்களது மெய்நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்கள் மின் வணிக வர்த்தகம் மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி அமைத்துக் கொடுக்கப்படும்.

இந்த மெய்நிகர் பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை விமானநிலையம், பெருவணிக வளாகங்கள் (Malls) போன்ற இடங்களில் அமைக்கப்படவுள்ளது.

இந்த பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய அமைப்பின் மூலம் (PPP) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகப் பொருட்களை சந்தைப்படுத்தவும், விற்பனை செய்யவும் தேவையான மின்னணுக்கருவிகளை அமைத்தும் மற்றும் அதை பராமரிக்கத் தேவையான வசதிகள் செய்தும் தருவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. பூம்புகார் என அழைக்கப்படும் இந்த அமைப்பின் மூலம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது மின்-வணிக விற்பனையை மெய்நிகர் தோற்ற தொழில்நுட்பம் மூலம் மேற்கொள்ளும்.

## 7. தகவல் தொழில்நுட்பம் சாரா முயற்சிகள்

மேற்கூறப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப முறைகள் மட்டுமல்லாமல் பின்வரும் தகவல் தொழில்நுட்பம் சாரா அம்சங்களாலும் இந்நிறுவனம் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டுள்ளது:

- அரசுத் துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப்பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் **1998** பிரிவு **16 (f)**ன் கீழ் ஒரு **“விருப்ப கொள்முதல் முகமை”** (Optional Procurement Agency) என அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

- பூம்புகார் விற்பனை நிலையம், உற்பத்தி நிலையம் மற்றும் நிறுவன அலுவலகத்திற்கு பொதுவான பெயர் பலகை உருவாக்குதல்.

- தற்போதைய பூம்புகாரின் **இலச்சினை** (logo) மறு வடிவமைத்து வர்த்தக குறியீட்டுக்கான பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல்.

- இந்திய தபால் துறையுடன் கைவினைப்பொருள் விநியோகத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நட்சத்திர ஓட்டல்களுடன் வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய சணல் மேம்பாட்டு கழகத்துடன் (National Jute Development Corporation) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- ஆஸ்திரேலியா நாட்டில் சிட்னி நகரிலுள்ள கீரின் டிரண்ட்ஸ் (Green Trends), நிறுவனத்துடன், ஒரு வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசு நிறுவனமான Trifed நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- விற்பனை பணியாளர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்துதல்.
- அனைத்து விற்பனையகங்களிலும் வாடிக்கையாளர்கள் கருத்து கோரும் பின்னூட்ட படிவம் வடிவமைத்து அறிமுகப்படுத்துதல்.
- வாடிக்கையாளர்கள் வாங்கிய கைவினைப்பொருட்களை எடுத்து செல்ல புதிய காகித விளம்பர பை வடிவமைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இதர நிலையங்களில் சந்தை பிரச்சாரத்தை மேம்படுத்த நடமாடும் கூடாரம் (KIOSK) வடிவமைத்தல்.
- சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வீடுகளுக்கு சென்று விநியோகம் செய்தல்.

**8. புதிய வருவாய் முறைகள்**

பூம்புகாரின் புதிய வருவாய் முறை ஏற்படுத்திட மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன. அதனடிப்படையில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து அழகுபடுத்தும் பணிகளை பூம்புகார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை விமான நிலையம் | 552.00 |
| 2 | சென்னை விமான நிலையம் கிளப் ஹவுஸ் | 58.10 |
| 3 | திருப்பதி விமான நிலையம் | 28.48 |
| 4 | திருச்சி விமான நிலையம் | 62.10 |
| 5 | மதுரை விமான நிலையம் | 71.00 |
| 6 | கோயம்புத்தூர் விமான நிலையம் | 52.79 |
| 7 | புதுச்சேரி விமான நிலையம் | 4.79 |
| 8 | TCS இராமானுஜன் IT பார்க் | 72.57 |
| 9 | எண்ணூர் துறைமுகம் | 110.00 |
| 10 | தலைமைச் செயலகம் | 20.00 |
| 11 | ரிப்பன் மாளிகை | 36.80 |
| | **மொத்தம்** | 1068.63 |

**புதிய அழகுபடுத்தும் திட்டங்கள்**

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | எண்ணூர் துறைமுகம் | 175.00 |
| 2 | தூத்துக்குடி விமான நிலையம் | 29.83 |
| 3 | TTDC (Kiosk Center) 6 கடற்கரைகள் | 152.00 |
| 4 | TTDC (Landscaping) 4 கடற்கரைகள் | 279.00 |
| | **மொத்தம்** | **635.83** |

**உலக தமிழ்ச் சங்கம் அழகுபடுத்தும் திட்டம்:**

தமிழ்வளர்ச்சி துறையின் கீழ் இயங்கும் மதுரையில் உள்ள உலக தமிழ்ச் சங்கத்திடமிருந்து பூம்புகார் நிறுவனம் ரூ.5000.00 இலட்சத்திற்கு அழகுபடுத்தும் பணிக்காக சிறப்பாணை பெற்றுள்ளது. இந்த அழகுபடுத்தும் பணி 3 ஆண்டு காலத்திற்கு 3 கட்டமாக நிறைவேற்ற நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக இவ்வாண்டு 2018–2019க்கு ரூ.1500.00 இலட்சம் செலவில் அழகுபடுத்தும் பணியினை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வகை சிறப்பு ஆணைகள் செயல்படுத்துவதன் காரணமாக, பூம்புகார் நிறுவனம் நாட்டிலேயே தலைசிறந்த கைவினைப்பொருட்களை கொண்டு உள்அலங்காரம் மேற்கொள்ளும் நிறுவனமாக திகழ்கிறது.

## 9. தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியதற்காக பூம்புகார் பெற்ற விருதுகள்

(அ) மத்திய அரசின் நிருவாக சீர்திருத்தம், ஓய்வூதியம் மற்றும் பொது மக்கள் குறை களையும் துறை வழங்கும் 2016–2017–ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமைக்கான தேசிய வெள்ளி விருது, மின் ஆளுமையை நடைமுறைபடுத்தியதற்காக இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தகவல் தொழில்நுட்ப மேலாண்மைக்காக ஸ்கோச் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், குர்கான் வழங்கும் 2016–2017–ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் ஸ்மார்ட் கவர்னன்ஸ் (Skoch Smart Governance Award) விருதினை பெற்றுள்ளது.

## 10. ஏற்றுமதி

பூம்புகார் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய

கைவினைப்பொருட்களாகும். **2017–2018** ஆம் ஆண்டில் ரூ. **28.60** இலட்சம் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.



**பஞ்சலோக கிருஷ்ணர் மற்றும் நடனமாடும் விநாயகர்**

**11. சிறப்புத் திட்டங்கள்**

அ. பூம்புகார் நிறுவனம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறைக்கு **2016–2017**–ஆம் ஆண்டிற்கு ரூ.**84.95** இலட்சத்திற்கு பித்தளை சலவைப் பெட்டிகள் வழங்கியுள்ளது. மேலும் இவ்வாண்டு ரூ.**175.00** இலட்சத்திற்கு மேற்கூறப்பட்ட துறைக்கு சலவைப் பெட்டிக்கான ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினர் நலத்துறைக்கு ரூ.49.00 இலட்சத்திற்கு சிறப்பாணைப் பெற்றுள்ளது.



**பித்தளை சலவைப்பெட்டி**

ஆ. தேவை பட்டியலுக்கேற்ப அரசுத் துறைகளுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்கள் தயாரிக்கப்படுகிறது.

## 12. கைவினைஞர்களுக்கான நலன்

### 12.1 கைவினைஞர்கள் தினம்

அழகிய கைத்திறப்பொருட்களின் மேல் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை ஒரே நாளில் தமிழகம் முழுவதும் வழங்கவும், கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.35.00 இலட்சம் செலவில் ஒவ்வொரு ஆண்டும் "**மார்ச் 5–ஆம்**" நாள்

“**கைவினைஞர்கள் தினமாக**” தமிழகம் முழுவதும் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் கைவினைஞர்கள் தினம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் 08.03.2018 அன்று கொண்டாடப்பட்டது.

தமிழகத்திலுள்ள 1200 கைவினைஞர்கள், சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர்கள், 12 அமைச்சர்கள், துணை முதலமைச்சர் ஆகியோருடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு புதிய திட்டங்களை தொடங்கிவைத்து, பூம்புகார் ஆண்டு விருதுகளை கைவினைஞர்களுக்கு வழங்கினார்.



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் திரு T.வெங்கடேசராஜாவிற்கு ‘தஞ்சாவூர் ஓவியத்திற்காக’ வாழும் கைவினைப்பொக்கிஷம் விருதினை வழங்குகிறார்கள்**

## 12.2 விருதுகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08.03.2018 அன்று கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற கைவினைஞர்கள் தின விழாவின்போது வருடாந்திர பூம்புகார் விருதுகளை வழங்கினார்:-

| வ. எண். | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் | ரூ.1.00 இலட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.10,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 70 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 1 |
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர்–களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | **மொத்தம்** | | **247** |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவம் மிக்கதாக இம்மாநிலம் திகழ்கிறது.

**12.3. பயிற்சித் திட்டங்கள்**

- தஞ்சாவூரில், தஞ்சாவூர் கலைத்தட்டு கைத்திறத் தொழிலில் 5 மாதகால பயிற்சித்திட்டம் 40 கைவினைஞர்களுக்கு ரூ. 8.45 இலட்சம் செலவில் 02.04.2017 முதல் 15.09.2017 முடிய நடைபெற்றது.
- ரூ.7.00 இலட்சம் செலவில் 50 திருநங்கைகளுக்கு வாழைநார் கைத்திறத் தொழிலில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.
- சிறப்புத் தேவைப்பாடுகள் உள்ள சிறார்களின் படைப்புத்திறனை பெருக்குவதற்கும், நல்லதொரு பொருளாதார நிலையை அவர்களுக்கு உருவாக்கும் நோக்கத்துடனும், கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிக்கும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டம் ரூ.16.00 இலட்சம் செலவில் 20 நபர்களுக்கு V-Excel கல்வி அறக்கட்டளை, சென்னை மூலம்

வழங்கப்பட்டது. இப்பயிற்சித்திட்டம் **08.09.2016** அன்று துவக்கப்பட்டு **10.03.2017** அன்றுடன் நிறைவடைந்தது.

- கைத்திறத்தொழிலில் பஞ்சலோகச் சிலைகளை தயாரிக்கும் **3** ஆண்டு பயிற்சி திட்டம் ஒன்றினை **"குருகுலம்"** என்ற திட்டத்தின்கீழ் தமிழக அரசின் நிதியுதவியுடன் **5** கைவினைஞர்களுக்கு **ரூ.30.00** இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டத்தில் **30.03.2015** முதல் **31.03.2018** வரை நடைபெற்றது.
- ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நாச்சியார் கோவிலில் உள்ள பூம்புகார் பித்தளை மற்றும் உலோகப்பொருட்கள் உற்பத்தி நிலையத்தில் **40** கைவினைஞர்களுக்கு **ரூ.14.45** இலட்சம் செலவில் பித்தளை விளக்கு மற்றும் உலோக கைவினைப்பொருட்களில் பயிற்சி **18.12.2017** முதல் நடைபெற்று வருகிறது.



**தஞ்சாவூர் கலைத்தட்டு கைத்திறத் தொழிலில் பயிற்சி**

## 13. நகர்ப்புற கண்காட்சித்திடல்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடலில் உணவு மற்றும் விற்பனைக் கூடம் உள்நாடு/சர்வதேச சுற்றுலா பயணிகள் / நுகர்வோர்க்கு ஏற்ப

கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

### 13.1. கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார் கன்னியாகுமரியில் ரூ.240.00 இலட்ச மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித்திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.140.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.40.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித்திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்புற கண்காட்சித்திடல் மூலம் மாதந்தோறும் சராசரியாக 30 கைவினைஞர்கள் பங்குபெறுகின்றனர். இக்கண்காட்சித் திடல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை ரூ.14.05 இலட்சம் வியாபாரம் செய்து 320 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.



**கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல் விற்பனை**

## 13.2 மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

இதேபோன்று மற்றுமொரு நகர்ப்புற கண்காட்சித்திடல் சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் ரூ.500.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.210.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.190.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.100.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித்திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 36 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாகும்.

இக்கண்காட்சித்திடல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **08.03.2018** அன்று கைவினைஞர்கள் தின விழாவின்போது துவக்கி வைக்கப்பட்டது.






**மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்**

**13.3 உதகமண்டலம் நகர்ப்புற கண்காட்சித்திடல்**

உதகமண்டலத்தில் ரூ.500.00 இலட்சத்தில் இன்னொரு நகர்புற கண்காட்சித்திடல் அமைக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. உதகமண்டலத்தில் தோட்டக்கலை இயக்குநகரத்திற்கு சொந்தமான காட்டேரி தோட்டக்கலை பூங்காவில் 2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கண்காட்சித் திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 40 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாக அமையும்.

**14. கிராப்ட் கபே**

மாமல்லபுரம் பூம்புகார் விற்பனை நிலையத்தில் கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் அமைக்க ரூ.25.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இந்த கிராப்ட் கபே 08.03.2018 அன்று கைவினைஞர்கள் தின விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதேபோன்று கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கைத்திறப்பொருட்கள் விற்பனையில்

இந்த யுக்தியின் மூலம் பெருமளவிலான வாடிக்கையாளர்களை ஈர்ப்பதுடன் கைவினைப்பொருட்களின் விற்பனையும் அதிகரிக்கும் என பூம்புகார் எதிர்பார்க்கிறது



**மாமல்லபுரத்தில் கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி உணவகம்**

## 15. ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசு ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2038.00 இலட்சத்தினை பூம்புகாருக்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் தமிழக அரசின் பங்கு ரூ.324.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணி சூழல், திறன் மேம்பாடு,

சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல்.

## ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி–முன்னேற்றம்

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டங் களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப் பட்ட தொகை | 2016–2017–ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | | 2017–2018–ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | | மொத்த செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. இலட்சத்தில் | இயல்பு | ரூ. இலட்சத்தில் | இயல்பு | ரூ. இலட்சத்தில் | ரூ. இலட்சத்தில் |
| **1.** | பொது வசதி மையம் | 13 | 780.00 | 6 | 30.60 | 7 | 220.75 | 251.35 |
| **2.** | கண்காட்சி | 22 | 362.00 | 18 | 118.00 | 4 | 24.00 | 142.00 |
| **3.** | கிராப்ட்பஜார் | 12 | | 6 | 98.00 | 6 | 45.00 | 143.00 |
| **4.** | வடிவமைப்பு கருத்தரங்கு | 63 | 189.00 | 1 | 3.00 | – | – | 3.00 |
| **5.** | ஒருங் கிணைந்த பயிற்சி | 21 | 177.45 | 1 | – | 1 | 8.45 | 8.45 |
| **6.** | உபகரணப் பொருட்கள் | 10000 | 500.00 | 1000 | 43.00 | 2400 | 88.40 | 131.40 |
| **7.** | உற்பத்தி யாளர்– நுகர்வோர் கூட்டம் | 2 | 30.00 | 1 | 15.00 | 1* | – | 15.00 |
| | **மொத்தம்** | | **2038.45** | | **307.60** | | **386.60** | **694.20** |

* கூட்டம் நடத்தப்படவுள்ளது.

### 15.1 பொது வசதி மையம்

பொது வசதி மையங்களில் பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், இவ்விடத்தில் ஒன்று கூடி இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு

வசதியைப் பயன்படுத்தி, இங்குள்ள உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம் இவர்கள் செய்யும் கைவினைப்பொருட்களை மிக குறைந்த விலையில் துரிதமாக செய்யமுடியும்.

சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைக்குளம் ஆகிய 6 இடங்களில் ரூ.360.00 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பொது வசதி மையங்களை கைவினைஞர்கள் தின விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08.03.2018 அன்று துவக்கி வைத்தார்கள். இந்த பொது வசதி மையங்களின் மூலம் 2450 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.



**பஞ்சலோகம் – பொது வசதி மையம், சுவாமிமலை**



**தஞ்சாவூர் கலைதட்டு – பொது வசதி மையம், தஞ்சாவூர்**



**பித்தளை விளக்கு – பொது வசதி மையம், நாச்சியார்கோவில்**



பித்தளை பொருட்கள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் பொது வசதி மையம், வாகைகுளம்



பித்தளை விளக்கு மற்றும் பித்தளை கலைப்பொருட்கள் பொது வசதி மையம், மதுரை



**இயற்கை நார் பொருட்கள்– பொது வசதி மையம், கன்னியாகுமரி**

## 16. நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல்

தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத்தொழில்களான சுடுமண், பனைஓலைப் பொருட்கள், கோரைப்புல் மற்றும் களிமண் ஆகியவற்றிக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு 4 பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்க தமிழக அரசு ரூ.188.00 இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண். | கைத்திறத் தொழிலின் பெயர் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | கோரைப்புல் பாய் – பத்தமடை (வீரவநல்லூர்), திருநெல்வேலி மாவட்டம். | ரூடாக்–ஐஐடி, சென்னை திட்டத்தை நடைமுறைப்படுத்த செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 2. | சுடுமண்– குன்னியூர், திருநெல்வேலி மாவட்டம். | கருகுறிச்சி மண்பாண்ட தொழிற் சங்கத்தின் கைப்பற்றிலுள்ள நிலத்தினை தமிழ்நாடு கைத்திறத் |

| வ. எண். | கைத்திறத் தொழிலின் பெயர் | தற்போதைய நிலை |
|---|---|---|
| | | தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| 3. | பனைஓலை– செய்யார், திருவண்ணாமலை மாவட்டம். | சென்னை அம்பத்தூரை சார்ந்த சுதேசி அறக்கட்டளை செய்யாரில் இப்பொது பயன்பாட்டு மையத்தினை அமைக்க முன்வந்துள்ளது. அந்நிறுவனத்திடம் உரிய அறிக்கை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது. |
| 4. | களிமண்– வண்டிப்பாளையம், கடலூர் மாவட்டம். | நிலம் ஒதுக்கீடு செய்ய விழுப்புரம் மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. |

## 17. சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் அதிக தேவைப்பாடு உள்ள பயன்பாட்டு பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு ரூ.**50.00** இலட்சம் மதிப்பீட்டில் இரண்டாவது தளம் அமைக்க நிதியுதவி வழங்கியுள்ளது.

## 18. தலைமை அலுவலகம் புதுப்பித்தல்

பூம்புகார் நிறுவனம் தனது தலைமையலுவலகத்தில் நபார்டு கடனுதவியுடன் ரூ.**225.00** இலட்சம் மதிப்பில் கூடுதல் வசதிகளுடன் கூடிய மேலும் இரண்டு தளம் அமைக்கப்படவுள்ளது.

## 19. உலக கற்சிற்ப நகரம்

பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியால், மாமல்லபுரத்தை “உலக கற்சிற்ப நகரம்” என்று உலகக் கைத்திறன் குழுமம் (World Crafts Council) அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.




**உலகக் கைத்திறன் குழுமத்தால் மாமல்லபுரத்தை “உலக கற்சிற்ப நகரமாக” அங்கீகரிக்கப்பட்டதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் 08.03.2018 அன்று அறிவித்துள்ளார்கள்.**

**20. மாமல்லபுர கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு**

பூம்புகார் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மத்திய அரசின் புவிசார் குறியீடு பதிவகம் மாமல்லபுரத்தில் உள்ள கற்சிற்ப கலைகளுக்கு “புவிசார் குறியீடு” சான்றிதழினை 15.11.2017 அன்று வழங்கியது.

**21. ஆஸ்திரேலிய பயணம்**

ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரத்தில் உள்ள கிரீன் டிரென்ட்ஸ் நிறுவனத்துடன், பூம்புகார், தமிழகத்தின் கைவினைப் பொருட்களை சந்தை மற்றும் விற்பனை செய்ய ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு பூம்புகார் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் 08.10.2017 முதல் 14.10.2017 வரை வர்த்தகரீதியாக ஆஸ்ரேலிய பயணம் மேற்கொண்டார்.

**22. தொலைநோக்கு பார்வை**

கடந்த மூன்று ஆண்டுகளில் பூம்புகாரின் மூலம் கைவினைஞர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் புதுமைத் திட்டங்கள் மூலமாக பூம்புகாரின் விற்பனை 2018–2019–இல் கணிசமான அளவு அதிகரிக்கும் என பூம்புகார் நம்புகிறது.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

“கதர் துணி மட்டுமே தடிமனான நூலில் இருந்து எளிதாக தயாரிக்கப்படுவதனால், கதரின் பயன்பாடு சுதேசியின் அடித்தளமாகும். கதர் துணியுடன் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்ட துணிகள் இதுவரை போட்டியிட முடியவில்லை. கதர் பயன்படுத்துவதினால் மட்டுமே இலட்சக்கணக்கான ஏழை மக்கள் அவர்தம் இல்லத்திலேயே வேலை செய்து நேர்மையாக வாழ வழி வகுக்கிறது.”

– அண்ணல் காந்தியடிகள்

கைவினைஞர்கள், நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் இவர்களது வேலையின்மையினை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏப்ரல் **1960–**இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய சட்டம், **1959–**இன்படி உருவாக்கப்பட்டது.

கிராமப்புறப் பகுதிகளில், கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து அவற்றை மேம்படுத்துவதோடு கைவினைஞர்களையும் நலிவுற்ற மக்களையும் ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார நிலையினையும் உயர்த்துவதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

**1. வாரியத்தின் நோக்கங்கள்**

அ) கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

ஆ) ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் சமூக நோக்கத்தினை நிறைவேற்றுதல்.

இ) சுற்றுச்சூழலுக்கு இணக்கமான, எளிதில் விற்கக் கூடிய கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதார நோக்கங்களை செயல்படுத்துதல்.

ஈ) ஏழை மக்களிடையே தற்சார்பு நம்பிக்கையினை உருவாக்கும் ஒரு வலுவான கிராம சமூக உணர்வினை வளர்க்கும் பரந்த நோக்கத்தினை அடைதல்.

உ) கிராம கைவினைஞர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை உயர்த்துதல்.

## 2. நிருவாகம்

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு சட்ட ரீதியான அமைப்பாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இயங்கி வருகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியக் குழுவினால் எடுக்கப்படுகின்றன. அன்றாட நிருவாக நடவடிக்கைகள் தலைமைச் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகின்றன.

## 3. செயல்பாடுகள்

வாரியத்தின் செயல்பாடுகள் "கதர்" மற்றும் "கிராமத் தொழில்கள்" என்ற இரண்டு பிரதானப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### 3.1 கதர்

கதர் எளிமை மற்றும் தேசப்பற்றினை வெளிப்படுத்துவதுடன், இந்திய கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் கிராமப்புற இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. கதர் துணிகள்,

பருத்தி மற்றும் பட்டு நூல்களைப் பயன்படுத்தி கைத்தறிகள் மூலம் கையினால் நெய்யப்படுவதாகும். முந்தைய ஆண்டுகளில் கதர் துணிகள் 100% பருத்தியில் தயாரிக்கப்பட்டன. சந்தையில் பாலியஸ்டர் வந்த பின்பு, கையினால் நூற்கப்பட்ட 67% கதர் நூலும் மற்றும் 33% பாலியஸ்டர் நூலும் சேர்க்கப்படுவதினால், தற்போது கதர் என்பது கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் கதர் பட்டு ஆகிய மூன்று வகைகளில் கிடைக்கின்றன.

### 3.2 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்றான கதர் உற்பத்தியானது, கிராம கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்கள் உற்பத்தியின்கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கிய செயல்பாடுகளாக விளங்குகின்றன. கதராணைக்குழுவின், மத்திய பட்டை பஞ்சு ஆலையிலிருந்து பட்டை பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டு, 40 கதர் உபகிளைகள் மற்றும் 9 நேபாளி தறி அலகுகளுக்கு பகிர்ந்தளிக்கப் படுகின்றன. கதர் உபகிளைகளிலிருந்து 107 கிராமிய நூற்பு (RTC) நிலையங்களின் மூலம் நூற்பாளர்களுக்கு (1539 நூற்பாளர்கள்) பட்டை பஞ்சு வழங்கப்பட்டு, அவை நூலாக

மாற்றப்பட்டு மீளவும் கதர் உபகிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் சிட்டங்கள் (நூல்) நெசவாளர்களுக்கு (356 நெசவாளர்கள்) வழங்கப்பட்டு கோரா துணியாக உற்பத்தி செய்து மீளவும் கதர் உபகிளைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த நிலையங்கள் மூலம் சுமார் 1895 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் சான்றளிக்கப்பட்ட 66 சர்வோதய சங்கங்களானது, கதர் உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் நூற்பு, நெசவு மற்றும் இதர தொடர்நிலை பணிகளில் ஈடுபட்டுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. 2017–2018–ஆம் ஆண்டில் வாரியம் ரூ.980.66 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1157.16 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. சர்வோதய சங்கங்களில் 6560 நூற்பாளர்களும் 2757 தறிகளும் உள்ளன.



கிராமிய நூற்பு நிலையம், பெருமாநல்லூர் திருப்பூர்  மாவட்டம்



கதர் உபகிளை,  காவிலிபாளையம் – ஈரோடு மாவட்டம்

**2015–2016** முதல் **2017–2018** வரையிலான பட்டை பஞ்சு கொள்முதல் மதிப்பு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்களின் எண்ணிக்கை, நூற்பு கூலி மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, நெசவுக்கூலி விவரங்கள் பின்வருமாறு:

| **வருடம்** | **கொள் முதல் செய்யப் பட்ட பட்டை பஞ்சு (கிலோ)** | **மதிப்பு (ரூ. இலட்சத் தில்)** | **உற்பத்தி செய்யப்பட்ட துணி மதிப்பு (ரூ. இலட்சத் தில்)** | **நூற்பாளர் களின் எண்ணி க்கை** | **நூற்பு கூலி (ரூ. இலட்சத் தில்)** | **நெசவாளர் களின் எண்ணிக் கை** | **நெசவுக் கூலி (ரூ. இலட்சத் தில்)** |
|---|---|---|---|---|---|---|---|
| 2015-2016 | 110933 | 194.27 | 925.33 | 1334 | 188.46 | 315 | 161.82 |
| 2016-2017 | 124903 | 202.63 | 929.73 | 1386 | 205.08 | 356 | 95.94 |
| 2017-2018 | 124908 | 213.06 | 980.66 | 1539 | 209.21 | 356 | 166.71 |

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களின் கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| **நிறுவனங்கள்** | **வருடம்** | **உற்பத்தி** | **விற்பனை** |
|---|---|---|---|
| | | **(ரூ. இலட்சத்தில்)** | |
| கதர் வாரியம் | 2015-2016 | 925.33 | 1795.43 |
| | 2016-2017 | 929.70 | 1348.37 |
| | 2017-2018 | 980.66 | 1157.16 |
| சர்வோதய சங்கங்கள் | 2015-2016 | 15719.38 | 19936.00 |
| | 2016-2017 | 17281.42 | 23085.01 |
| | 2017-2018 | 14291.25 | 19743.95 |

**3.3 கதர் பட்டு**

வாரியத்திலுள்ள **16** கதர் பட்டு உற்பத்தி அலகுகள் மூலம் பாரம்பரியம் வாய்ந்த பட்டுப் புடவைகள், தூய வெள்ளி சரிகை மற்றும் வேலைப்பாடுகளுடன் தயாரிக்கப்பட்டு, குறைந்த பட்சம் ரூ.**5000/–** முதல் அதிகபட்சம் ரூ.**35,000/–** வரை விற்பனை செய்யப்படுகின்றன. நுகர்வோர் விரும்பத்தக்க வகையில் அச்சிட்ட மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டுப் புடவைகளும் வாரியத்தால் தயார் செய்யப்படுகின்றன. தரம் மற்றும் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் வாரியப்பட்டு உற்பத்தி அலகுகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகள் பொதுமக்களால் மிகவும் போற்றப்படுகின்றன. வாரியம் தனது உற்பத்தி அலகுகள் மூலம் **236** பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை அளித்து வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு வகைகளுக்கு மத்திய பட்டு வாரியத்தால், “தரம் வாய்ந்த பட்டு” என்பதற்கு சான்றாக “சில்க் மார்க்” முத்திரை வழங்கப்பட்டுள்ளது. **2017–2018**–ஆம் ஆண்டில் ரூ.**503.75** இலட்சம் மதிப்புள்ள கதர் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.**659.30** இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.



**கதர் பட்டுத்தறி நெசவு – கும்பகோணம்**

கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண். | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2014-2015 | 575.57 | 759.05 |
| 2 | 2015-2016 | 539.16 | 739.45 |
| 3 | 2016-2017 | 539.66 | 658.46 |

# 4. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள்

## 4.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, அரசினால் நல வாரியம்

அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெற்றுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கிட ஏதுவாக அரசு மானியமாக **2010–2011** மற்றும் **2011–2012**–ஆம் ஆண்டுகளுக்கும் தலா ரூ.**50.00** இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:

| வ. எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/– |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப | 10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/– |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/– |
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | அ | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | ஆ | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | இ | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | ஈ | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | உ | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | ஊ | முறையான பட்டப்படிப்புக்கு | 1,500/– |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | 1,750/– |

| வ. எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | எ | முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2,000/– |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3,000/– |
| | ஏ | தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 2,000/– |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 4,000/– |
| | ஐ | தொழில் கல்வி பட்ட மேற்படிப்புக்கு | 4,000/– |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டமேற்படிப்புக்கு | 6,000/– |
| | ஒ | ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு | 1,000/– |
| | | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு | 1,200/– |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/– |
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |
| | அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள் மகப்பேறுக்கு பின் 3 மாதங்கள்) | 6,000/– |
| | ஆ | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/– |
| 7 | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/– வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000/– |

இந்த நல வாரியத்தில் 9042 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2017–2018–ஆம் ஆண்டு வரை, 1134 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.54.52 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நலநிதி 1990–ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பதோடு வாரியமும் அதற்கு ஈடான தொகையினை பங்களிக்கிறது. கைவினைஞர்களின் கணக்கில் இருக்கும் கையிருப்பு தொகையின் அடிப்படையில் 741 நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினரின் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் திரும்ப வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித்தொகை தவிர அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2017–2018–ஆம் ஆண்டில் 741 கைவினைஞர்களுக்கு ரூ.28.58 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**4.3 உற்பத்தித் திறனை மேம்படுத்திட உதவி**

கதர் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திட கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்படி, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கூடுதலாக **587** நூற்பாளர்கள் (முன்பு **619** நூற்பாளர்கள்) மற்றும் **50** நெசவாளர்களுக்கு (முன்பு **147** நெசவாளர்கள்) **2017–2018–**ஆம் ஆண்டிற்கு என ரூ.**245.01** இலட்சம் ஒதுக்கீட்டில், இராட்டைகள் மற்றும் தறிகள் இலவசமாக வழங்கி அதற்கான பயிற்சி வழங்கப்படுகிறது. இதனால் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு கதர் உற்பத்தி அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**5. வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம்**

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் கதர் கிராமத் தொழில் ஆணையம் **2010–2011–**ஆம் ஆண்டு “வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டத்தினை” (MDA) அறிமுகப்படுத்தியது.

**2016–2017–**ஆம் ஆண்டு முதல், வணிக அபிவிருத்தித் திட்டம் என்பதை திருத்திய வணிக அபிவிருத்தித் திட்டம் என

மாற்றம் செய்து கதர் உற்பத்தி செய்யும் ஆரம்ப விலைக்கு 30% நிதியுதவி கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டவாறு காலாண்டு வாரியாக பிரித்து வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | நூற்போர் / நெசவாளர்களுக்கான ஊக்கத் தொகை | 30% |
| 2. | கைவினைஞர்களுக்கான ஊக்கத் தொகை | 10% |
| 3. | உற்பத்திக்கான உட்கட்டுமான பணி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக (உற்பத்தி நிறுவனங்களுக்கு) | 20% |
| 4. | விற்பனை கூடங்களை கணினி மயமாக்குதல் (உற்பத்தி நிறுவனங்களுக்கு) | 20% |
| 5. | வணிகம் மற்றும் விற்பனை அதிகரிப்பு (விற்பனை நிறுவனங்கள்) | 20% |

இத்திட்டத்திற்கு தேவையான வழிமுறைகள் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்பட்டு சர்வோதய சங்கங்களுக்கான மானியம் நேரடியாக நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு மின்னணுத் தீர்வை மூலம் வழங்கப்படுகிறது. இதன் விவரம் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

30% ஊக்கத் தொகையானது, நூற்பாளர்/ நெசவாளர்களின் வங்கிக் கணக்கிற்கு கதராணையம் மூலமாக

ஒவ்வொரு காலாண்டிற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள தொகை வாரியக் கணக்கிற்கு நிதிமாறுதல் செய்யப்படுகிறது.

மாநில அரசு, கதர் உற்பத்தி மதிப்பின் மீது **20%** வணிக அபிவிருத்தி நிதியுதவியாக வழங்கி வருகிறது, கதராணையத்திடமிருந்து பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவி விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| **வருடம்** | **கதராணையத்திலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| 2014-2015 | 208.94 |
| 2015-2016 | 287.99 |
| 2016-2017 | 290.44 |
| 2017-2018 | 325.66 |

**2017–2018–**ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு, சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை, ரூ.**15.00** கோடியிலிருந்து ரூ.**30.00** கோடியாகவும் கதர் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.**2.00** கோடியிலிருந்து ரூ.**4.00** கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

## 6. கிராமத் தொழில்கள்

ஊரக பகுதியில் கிடைக்கின்ற மூலப்பொருட்களையும் மனித சக்தியையும் பயன்படுத்தி அங்கே வறுமையை அகற்றுவதற்கு இவ்வாரியம் கிராமத் தொழில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறைவான மூலதனத்தில் அதிக வேலைவாய்ப்பு அளிப்பது கிராமத் தொழில் திட்டங்களின் தனித்துவமான அம்சமாகும். அதன்படி வாரியமானது தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல்பொருட்கள் உற்பத்தி, சோப்பு உற்பத்தி, கைமுறை காகிதம், மண்பாண்டம் மற்றும் தேனீ வளர்ப்பு ஆகிய தொழில்களின் மூலம் கிராமத் தொழில்களை மேம்படுத்தி வருகிறது.



**மாவட்ட வாரியான  கிராமத் தொழில்கள்**

## 6.1 சோப்பு அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தும் பல்வேறு கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் முதன்மை இடத்தை வகிக்கிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் 16 சோப்பு அலகுகளில், 7 குளியல் சோப்பு அலகுகளும், 7 டிடர்ஜெண்ட் சோப்பு அலகுகளும், 2 சலவை சோப்பு அலகுகளும் ஆகும்.

வாரிய சோப்பு அலகுகளின் மூலம் வேம்பு, சந்தனம், கிளிசரின், மூலிகை மற்றும் குமரி ஆகிய நறுமண சோப்பு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக குமரி நறுமண சோப்புகளில் கற்றாழை கூழ் சேர்க்கப்பட்டுள்ளதால், இச்சோப்பு சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. “சுகந்தம்” எனும் லாவண்டர் சோப்பு மற்றும் “பொய்கை” எனும் சிவப்பு சந்தன சோப்பு ஆகியவை சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும், டிடர்ஜெண்ட் சோப்பு, டிடர்ஜெண்ட் பவுடர், பாத்திரம் துலக்கும் பவுடர் வகைகளும் வாரிய சோப்பு அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. டிடர்ஜெண்ட் சோப்புகள் குறிப்பாக தமிழகத்திலுள்ள நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வாரிய சோப்புகள் தரத்தில் உயர்வாகவும், விலையில் மலிவாகவும் உள்ளதால்,

சந்தையில் பலதரப்பட்ட பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2017–2018–ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி ரூ.723.46 இலட்சமும், விற்பனை ரூ.692.85 இலட்சமும் எய்தப்பட்டுள்ளது.

திருச்சி சமயபுரம் சோப்பு அலகில் நாள்தோறும் 4.0 மெ.டன் அளவிற்கு சோப்பு உற்பத்தி செய்யும் வகையில் நவீன சோப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. ரூ.30.00 இலட்சம் செலவில் சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் புதிய திரவ சோப்பு மற்றும் ஷாம்பு உற்பத்தி அலகு நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு கிராமத் தொழில் வகைகளான ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சாம்பிராணி, பூஜைப் பொருட்கள், சந்தனமாலை, மூலிகை பல்பொடி போன்றவை வேடப்பட்டி சோப்பு அலகில் தயாரிக்கப்படுகின்றன. இவ்வலகில், புதிய மெழுகுவர்த்தி உற்பத்தி இயந்திரங்கள், ரூ.20.00 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளன. கப் சாம்பிராணியின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் வேடப்பட்டியில் செயல்படும் ஜவ்வாது அலகில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு உள்ளன.



டிடர்ஜென்ட் சோப்பு அலகு, சங்கரன்கோயில் – திருநெல்வேலி மாவட்டம்



குளியல் சோப்பு அலகு, சமயபுரம் – திருச்சி மாவட்டம்

## 6.2 தச்சு மற்றும் கருமார அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழிலும் மிக முக்கியமானத் தொழிலாகும். இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, நாகமலை–புதுக்கோட்டை, நாஞ்சிக்கோட்டை, பேட்டை மற்றும் திருப்பூர் ஆகிய 7 இடங்களில் தச்சு மற்றும் கருமார அலகுகள் இயங்கி வருகின்றன.

அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக் கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, கல்வி நிறுவனங்களுக்கு தேவையான மரம் மற்றும் இரும்புத் தளவாடங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

உற்பத்தித் திறன் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரித்திட பள்ளிகொண்டா மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் செயல்படும் தச்சு மற்றும் கருமார அலகுகளில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பேட்டை, தச்சுக் கருமார அலகில் ரூ.2.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு உற்பத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

2017–2018–ஆம் ஆண்டு தச்சு மற்றும் கருமார அலகுகளில் ரூ.692.82 இலட்சம் அளவிற்கு உற்பத்தியும் ரூ.574.91 இலட்சம் அளவிற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளன.



**தச்சு மற்றும் கருமார அலகு, அரக்கோணம் – வேலூர் மாவட்டம்**

## 6.3 தோல் அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தில் செயல்படும் பல்வேறு கிராமத்தொழில்களில் தோல் தொழிலானது மிகவும் பழமை வாய்ந்த தொழிலாகும்.

இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் 13 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. காவல் மற்றும் தீயணைப்புத் துறைகளுக்குத் தேவையான அம்யூனிஷன் பூட்ஸ், பிரவுன் ஷூ, பெல்ட், துப்பாக்கி உறை, கிரவுண்டு சீட் போன்ற பொருட்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர் காலணி அலகில் நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நடத்துனர் பணப்பைகள், கையுறை, காலணிகள், கோப்புப் பெட்டிகள், இரப்பர் நார் மெத்தைகள் போன்றவை இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் காலணி உற்பத்திக் கூடங்கள் மூலம் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுமார் 300 கைவினைஞர்கள் நேரிடையாகவும் 500 கைவினைஞர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை பெற்று வருகிறார்கள்.

அம்பத்தூர் காலணி அலகிற்கு தோல் மடிக்கும் இயந்திரம் மற்றும் அடிப்பாகம் தைக்கும் இயந்திரம் ரூ.25.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்திட விநியோக ஆணை வழங்கப்பட்டு இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன.

2017–2018–ஆம் ஆண்டில் ரூ.641.22 இலட்சம் உற்பத்தியும், ரூ.527.88 இலட்சம் மதிப்பிற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளன.



**காலணி ஒப்பனை செய்யும் இயந்திரம், தோல் அலகு – அம்பத்தூர்**

## 6.4 தேனீ வளர்ப்பு அலகுகள்

கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தும் கிராமத் தொழில்களில், தேனீ வளர்ப்புத் தொழிலும் ஒரு முதன்மைத் தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக செயல்படுத்தப்

படுகிறது. இம்மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சுமார் **2000** தேனீ வளர்ப்போர் மற்றும் **10,000** தொழிலாளர்கள் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தேனீ வளர்போரிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேன், அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட தேன் அக்மார்க் தரச்சான்றிதழ் பெறப்பட்டு வாரிய கதரங்காடிகள் மூலமாகவும், தமிழகத்தில் உள்ள சர்வோதய சங்கங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஜவ்வாது மலைப்பகுதிகளில் அதிகம் வசிக்கும் தேனீ வளர்ப்போரைக் கருத்தில் கொண்டு, அப்பகுதிகளில் தேன் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமரத்தூர் தேன் பதப்படுத்தும் அலகினை மீண்டும் செயல்படுத்திட ரூ.**15.00** இலட்சம் செலவில் தேன் பதப்படுத்தும் இயந்திரங்களை நிறுவிடவும் மற்றும் தேன் பெட்டிகளை வழங்கிடவும், வாரியம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**2017–2018**–ஆம் ஆண்டில் ரூ.**150.24** இலட்சம் மதிப்பிலான பச்சைத் தேன் தேனீ வளர்போரிடமிருந்து

கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்தப்பட்ட தேன் ரூ.185.51 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



**தேன் பதப்படுத்தும் நிலையம், அம்சி – கன்னியாகுமரி மாவட்டம்**

## 6.5 கைமுறை காகித அலகுகள்

வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பிடாகம், செண்பகப்புதூர், கோவனூர் மற்றும் உதகை ஆகிய 4 இடங்களில் கைமுறை காகித அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வலகுகளின் மூலம் கச்சா அட்டைகள், எக்ஸ்ரே கவர்கள், சோப்பு அட்டைகள், மெல்லிய தாள்கள், தடித்த தாள்கள், அலுவலக உறைகள், மேலுறைகள், சோப்பு அட்டைப் பெட்டிகள், உட்புறம் துணியுடன் கூடிய காகித உறைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கைமுறை காகித உற்பத்தியை மேம்படுத்திட பழைய கழிவுத் தாள்களை பயன்படுத்தி மறுசுழற்சி முறையில் காகிதப் பொருட்கள் தயாரித்திட கடலூர் மாவட்டம் வடலூர் சோப்பு அலகு வளாகத்தில் ரூ.90.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவிட வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

கைமுறை காகித அலகுகள் 139 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. 2017–2018–ஆம் ஆண்டில் ரூ.69.52 இலட்சம் மதிப்பிலான காகிதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.51.28 இலட்சம் மதிப்பிற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளது.



**கைமுறை காகித அலகு, கோவனூர் – கோயம்புத்தூர் மாவட்டம்**

**6.6 மண்பாண்டத் தொழில்**

வாரியத்தின் கிராமத் தொழில்களில் மண்பாண்டத் தொழில் பழமையான தொழிலாகவும், கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களை தொடர்ந்து ஊக்குவிக்கும் முதன்மை வருமான தொழிலாகவும் திகழ்கிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 3816 உறுப்பினர்களை கொண்ட 34 மண்பாண்ட கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்த சங்கங்கள் 2017–2018–ஆம் ஆண்டில் ரூ.2.51 கோடி விற்பனை செய்துள்ளன. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மழைக்காலங்களில் ஏற்படும் இன்னல்களை கருத்தில் கொண்டு, மழைக்கால பராமரிப்புத் தொகையாக ரூ.4,000/– வழங்கப்பட்டது. இத்தொகையானது 2017–2018–ஆம் ஆண்டு முதல், மண்பாண்ட தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ரூ.4,000/–இல் இருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 12,236 மண்பாண்ட தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர்.

மாநிலத்திலுள்ள 8175 மண்பாண்டக் குடும்பங்களுக்கு நவீன மற்றும் இயந்திர முறையில் இயங்கும் சைலா சக்கரங்களை பல்வேறு கட்டங்களாக நான்கு ஆண்டுகளில்

வழங்கிட அரசு முடிவெடுத்ததைத் தொடர்ந்து, 2016–2017–ஆம் ஆண்டில் 2000 பயனாளிகளுக்கு சைலா மின் சக்கரங்கள் உற்பத்தி செய்திட ரூ.408 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அதற்கிணங்க 2000 சைலா மின் சக்கரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



**சைலாவீல்**

**7. விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர்த் துணி வகைகள்

மற்றும் பல்வேறு கிராமப்பொருட்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கென வாரியம் **'காதி கிராப்ட்'** என்ற பெயரில் மாநிலம் முழுவதும் **90** விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இத்துடன் பண்டிகை காலங்களில் வாடிக்கையாளர்கள் கதர் பொருட்களை எளிதில் வாங்கிச் செல்லும் வகையில் மாநிலத்திலுள்ள முக்கிய இடங்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டுமல்லாது, சுய உதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப்பொருட்களும் இந்த கதரங்காடிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கதர் கிராமப்பொருட்களை பிரபலப்படுத்தவும் விற்பனையினை அதிகரிக்கவும் சென்னை, இதர மாவட்ட தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் பண்டிகை காலங்களுக்கு ஏற்ப சம்மந்தப்பட்ட இடங்களில் கண்காட்சிகள் மற்றும் சிறப்பு விற்பனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. தசராக் காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர கொலு விற்பனை கண்காட்சி பிரசித்தி பெற்றதாகும். இக்கண்காட்சி, மண்பாண்ட கூட்டுறவு சங்க உறுப்பினர்களால் உற்பத்தி

செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால கலைநயம் மிக்க காகிதக் கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்திடுவதற்கு உகந்த தளமாகத் திகழ்கிறது.

**8. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்**

கடந்த **2008–2009**–ஆம் ஆண்டு முதல், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, கதர் கிராமத்தொழில் வாரியம் மற்றும் தொழில் வணிகத்துறை ஆகியவற்றின் மூலம், மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் **“பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்”** சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனாளிகள் தொழில் தொடங்க, அதிகபட்ச திட்ட அளவாக, உற்பத்திப் பிரிவிற்கு **25** இலட்ச ரூபாயும் மற்றும் சேவைப் பிரிவிற்கு **10** இலட்ச ரூபாயும், வங்கியினால் அனுமதிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம், உற்பத்திப் பிரிவின் கீழ் **10** இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களுக்கும் சேவைப் பிரிவின் கீழ் **5** இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களுக்கான கல்வித்தகுதியாக, குறைந்தபட்சம் **8**–ஆம் வகுப்பு தேர்ச்சியினை பயனாளிகள் பெற்றிருக்க வேண்டும். தொழில் முனைவோர்களுக்கு ரூ.**5** இலட்சம் வரை கடன் பெற்றிருந்தால் **6** தினங்களும், ரூ.**5** இலட்சத்திற்கு மேல் கடன்

பெற்றிருந்தால் 10 தினங்களும் தொழில் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் தொழில் தொடங்கும் இடத்திற்கேற்றவாறு விளிம்புத்தொகை மானியம் 25% முதல் 35% வரை வழங்கப்படுகிறது.

2013–2014–ஆம் ஆண்டு முதல் 2017–2018–ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | (திட்டம் எண்ணிக்கையில்/ரூ.இலட்சத்தில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குறியீடு | | | சாதனை | | |
| | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணிக்–கை | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணிக்–கை |
| 2013-2014 | 1379 | 1751.93 | 11032 | 602 | 1311.31 | 7212 |
| 2014-2015 | 1218 | 1447.49 | 9744 | 845 | 1726.62 | 9151 |
| 2015-2016 | 765 | 1530.24 | 6120 | 686 | 1605.56 | 6021 |
| 2016-2017 | 1261 | 2521.50 | 10088 | 745 | 2166.48 | 8384 |
| 2017-2018 | 1089 | 2178.15 | 8712 | 882 | 1680.74 | 6723 |

## 9. வாரியத்திற்கு சொந்தமான கட்டடங்களை புனரமைத்தல்

### (i) குறளகம் கட்டடம்

**1968–**ஆம் ஆண்டு கட்டப்பட்ட குறளகம் கட்டடத்தினை எழிலுற அமைக்கும் பொருட்டு, ரூ.**399** இலட்சம் செலவில் கட்டட தூண்களின் கட்டமைப்பை உறுதிப்படுத்தியும், பழைய சிமெண்ட் தகடுகளை அகற்றியும் புதிய பி.பி.ஜி.ஐ தகடுகளை பொறுத்தியும், கட்டடத்தினை முழுமையாக வர்ணம் பூசப்பட்டுள்ளது.

குறளகம் பிரதான கட்டடம் புனரமைப்புப் பணி நிறைவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து குறளக இணைப்புக் கட்டடமும், ரூ.**415** இலட்சம் செலவில் புனரமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### (ii) மதுரை மேல மாசிவீதி, கதர் அங்காடி

நமது தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் வருகை தந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மேலமாசி வீதியிலுள்ள கட்டடத்தை நவீன வசதியுடன் ரூ.**80** இலட்சம் செலவில் புனரமைத்திட பணிகள் நடைபெற்று வருகிறது.

**(iii) வேலூர் மற்றும் கரூர் உதவி இயக்குநர் அலுவலக வளாகங்கள் புனரமைத்தல்**

கதர் கிராமத்தொழில் திட்டங்களை வேலூர் மற்றும் கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தும் பொருட்டு 1988–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட வேலூர் மற்றும் கரூர் கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலக கட்டடங்களை தலா ரூ.18 இலட்சம் செலவில் புனரமைத்திட பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(iv) புதிய பணிக்கூடங்கள் கட்டுதல்**

மண்பாண்ட கூட்டுறவுச் சங்கங்களின் 5 பணிக் கூடங்களை கட்டுவதற்கும் மற்றும் 5 பழைய பணிக்கூடங்களை பழுது நீக்கம் செய்து புதுப்பித்திடவும் ரூ.100 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 10. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2017–2018–ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | தொழில்களின் பெயர் | 2017–2018–ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1484.41 | 1831.20 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| | அ. தோல் | 641.22 | 527.88 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 692.82 | 574.91 |
| | இ. சோப்பு | 723.46 | 692.85 |
| | ஈ. கைமுறை காகிதம் | 69.52 | 51.28 |
| | உ. தேனீ வளர்ப்பு | 150.24 | 185.51 |
| | ஊ. இதர தொழில்கள் | 68.14 | 245.69 |
| | **கூடுதல்** | **2345.40** | **2278.12** |
| | **மொத்த கூடுதல்** | **3829.81** | **4109.32** |

## 11. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட நிகர ஈட்டு மானியமும், கதர் பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும் மாநில அரசு ஒப்பளித்து வருகிறது. **2018–2019**–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | விபரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள் | | 9415.00 |
| 2 | தள்ளுபடி | கதர் வாரியம் | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 3000.00 |
| 3 | தணிக்கை கட்டணம் | | 394.69 |
| 4 | கிராமத் தொழில் மேம்பாட்டிற்கு உதவி | | 0.01 |
| 5 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 6 | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை | | 611.80 |
| 7 | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| 8 | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு சைலா சக்கரங்கள் வழங்குதல் | | 408.00 |
| | **மொத்தம்** | | **14229.52** |

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், தமிழ்நாடு சட்டம் 15 – ன் கீழ் 1994 – 1995 ஆம் ஆண்டில் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு துவங்கப்பட்டது. பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பனை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள் மூலம் பனை தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல் போன்றவை பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## 2. பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் நேரடியாக ஈடுபடுவதில்லை. 2,13,116 உறுப்பினர்களைக் கொண்ட 720 ஆரம்ப பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் எட்டு மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனங்கள்

மற்றும் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் நேரடியாக பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

## 3. பனை உற்பத்திப் பொருட்கள்

'பதநீர்' பனை பொருட்களில் முதன்மையானதாகும். பதநீரை மூலப்பொருளாகக் கொண்டே கருப்பட்டி என அழைக்கப்படும் பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, பனை சாக்லேட் மற்றும் பனம் பழக்கூழ் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பனை மரங்கள் அதிகம் வளரும் பகுதிகளில், பருவ காலத்தில் பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் மிகவும் விரும்பி அருந்தக் கூடிய ஒரு பிரபலமான பானமாகும்.



பனை வெல்லம்



இஞ்சி மிட்டாய்



பதநீர்



பனைவெல்லம்



சுக்குக்காபித் தூள்



பனை பொருள் விற்பனை ஊர்தி

பனையிலிருந்து உண்ணாப் பொருட்களான பல்வேறு வகையான பனந்தும்பு தூரிகைகள், விசிறிகள், பனை ஓலையினாலான பல்வேறு வகைக் கூடைகள், பனை நார் பொருட்கள், பொம்மைகள் மற்றும் பல்வேறு வகையான இயற்கையான மற்றும் வண்ணம் பூசப்பட்ட கைவினைப் பொருட்கள் போன்றவை பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்படுகின்றன.



**பனைக் கூடை**



**பனைப் பெட்டி**



**பனை ஓலை விசிறி**



**பனை தும்பு பிரஷ்**

**4. பதநீர் இறக்குவதற்கான உரிமம்**

பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும் உரிமம் பெற அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவின்படி **01.01.2016** முதல் மூன்றாண்டுகளுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு இதற்கான உரிமத்தினை புதுப்பித்து வழங்கியுள்ளது.

**2017 – 2018**–ஆம் ஆண்டில் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனங்கள், கதர் கிராமத்தொழில்கள், உதவி இயக்குநர்கள் மூலமாக அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த **8576** பனைத் தொழிலாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**5. பனைத் தொழிலாளர்களுக்கான உதவிகள்**

நவீன கருவிகள் மூலம் பனைமரம் ஏறுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பதநீர் இறக்கவும், பனை வெல்லம் காய்ச்சவும் தேவையான கருவிகளை வழங்குதல் மற்றும் பனை பொருட்களை விற்பனை செய்ய உதவுதல் ஆகியவற்றின் மூலம் பனைத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் உதவி வருகிறது.

**6. நிருவாகம்**

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனியே வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ஏதுமில்லை. தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்) உட்பட தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர் அனைவரும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து பணிஅமர்த்தப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்கள், மாநில, மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல்அலுவலரே செயற்பதிவாளர் ஆவார்.

**7. பனை பொருட்கள் மற்றும் சுக்குக்காபி விற்பனை**

பதநீர் என்பது பனை மரத்திலிருந்து இறக்கப்பட்ட ஒரு சில மணி நேரத்திற்குள்ளாக பருகப்பட வேண்டிய இனிமையான மற்றும் சத்துகள் அடங்கிய இயற்கையான பானமாகும். எனவே, பதநீரின் இயல்பு மாறாதிருக்கும் வகையில் பதநீரை பனை மரத்திலிருந்து இறக்கிய நேரம் முதல் வாடிக்கையாளரை சென்றடையும் வரையில் தொடர்ந்து

குளிர்சாதன முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்வகையில் பதநீரை அனைவரும் பருகும் வண்ணம் அதன் விற்பனையை அதிகப்படுத்திடவும் பதநீரை 'பாக்கெட்'டில் நிரப்பும் இயந்திரம், குளிரூட்டும் இயந்திரம், ஐஸ் பெட்டிகள் மற்றும் அலுமினிய கேன்கள் ஆகியவை அரசு உதவியுடன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களிடம் தற்போது சத்துள்ள இயற்கை உணவு குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது மூலிகைகளை கொண்டு தயாரிக்கப்படும் "**சுக்குக் காபி**" சென்னையில் பல்வேறு இடங்களான சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகம், தீவுத்திடல் போன்ற இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று கிரிவலப் பாதையில் சுக்குக் காபி, கதர் மற்றும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனை வாரியத்தின் பல்வேறு பனை பொருட்களை விற்பனை செய்திட பனை பொருளுக்கென தனிப்பட்ட ஒரு அங்காடி ஒன்று சென்னை குறளகம் வளாகத்தில் இயங்குகிறது.

## 8. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

**2017–2018–**ஆம் ஆண்டில், ரூ.**1463.12** இலட்சம் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.**1629.23** இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் **2018–2019–**ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு ரூ.**1650.00** இலட்சமாகவும், விற்பனை இலக்கு ரூ.**1870.00** இலட்சமாகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநில, மாவட்ட சம்மேளனம் மற்றும் ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான உற்பத்தி, விற்பனை மற்றும் இலாப விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | இலாபம் |
|---|---|---|---|
| | (ரூ.இலட்சத்தில்) | | |
| 2013 – 2014 | 1172.08 | 1279.30 | 107.22 |
| 2014 – 2015 | 1241.00 | 1373.00 | 132.00 |
| 2015 – 2016 | 1337.03 | 1462.09 | 125.06 |
| 2016 – 2017 | 1344.97 | 1484.30 | 139.33 |
| 2017 – 2018 | 1463.12 | 1629.23 | 166.11 |

பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டுதோறும் சீரான வளர்ச்சி அடைந்து வருவதை மேற்கண்ட அட்டவணையிலிருந்து அறியமுடிகிறது.

**க.பாஸ்கரன்**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள்
வாரியத்துறை அமைச்சர்